

குழந்தைகள் பத்திரிகை
9-11-1975
60 காசு

கோகுலம்





புதுமை

இந்தியாவில் இதுவே
முதல் முறை

கேம்லின் பேனா


தன்னுள்ளவே அமைந்த
பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்

கைதேர்ந்த கரத்துக்குப் பொருத்தமான
கச்சிதமான பேனா. முத்தான எழுத்துக்கு
இதுவோர் சத்தான துணை.
உள்ளமைந்திருக்கும் ஒரு வியப்பூட்டும்
அமைப்பால் தெள்ளத் தெளிவான
மணிமணியான எழுத்துக்கள்
வடிவம் பெறுகின்றன.
வழக்கமாக கொள்ளும் அளவைவிட
இரட்டிப்பு அளவு மை நிரப்ப, இந்தத்
தனிப்பட்ட பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்
வழி செய்வதால், நெடு நீண்ட நேரம் எழுதிக
கொண்டே இருக்கலாம்.

மை நிரப்பும் வேளையிலே
தருவதில்லை தொல்லை. கை எழுதும்
வேலையிலே தங்குதடை இல்லை!

கேம்லின் பேனாக்கள் மற்றும் பால்-பேனாக்கள்
மனதுக்கு இசைந்த எண்ணற்ற
தினுசுகளில் கிடைக்கின்றன.

கேம்லின் பிரை. லி.,
ஸ்டேஷனரி டிவிஷன், பம்பாய்.



Vision 752 Tam.

கோகுலம்

மலர் 4 ❋ இதழ் 16

நவம்பர் 9, 1975

ராட்சஸ, ஐப்பசி 23

சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்


பிரஷ்...பிரஷ்...பிரஷ்...!

தலை முடியைச் சீப்பு கொண்டு வாருவதினால் அழகும் பளபளப்பும், மிருதுத் தன்மையும் ஏற்படும். சீப்புக்குப் பதில் இப்போது சிலர் பிரஷ் கொண்டும் வாருகிறார்கள். எதானாலும் தலை முடியை ஐந்து நிமிஷங்கள் காலையிலும் இரவிலும் வாரிக் கொள்ள வேண்டும். நாம் இரவில் தலை வாரிக் கொள்ள மாட்டோம். மேல் நாட்டவர் படுக்கப் போகுமுன்பும் முடி வாரிக் கொள்ளுவார்கள். நன்கு வாரினால் முடிக்கு 'சாடின்' போலப் பளபளப்பு உண்டாகும். எண்ணெய் தடவிக் கொள்ளுவதானால் வாருவதினால் இது முடி முழுவதுக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும். மயிர்க் கால் துவாரங்கள் அடைபடாது முடி செழித்து வளர உதவும். சிடுக்குகளை விரல்களால் நீவி எடுத்த பிறகு தொடர்ந்து முடியை வாருவதினால் முடியில் சுருள் ஏற்படுமே தவிர சுருள் முடி மாறிவிடும் என்று பயப்பட வேண்டாம். நன்கு வாருவதினால், உங்கள் விருப்பம் போல முடியலங்காரம் செய்ய இலகுவாக இணைந்து கொடுக்கும்.

அடுத்து நீங்கள் பிரஷ் உபயோகிப்பது பற்களுக்கு. பிரஷ் கொண்டு துலக்கும் பற்கள் பளீரென்று ஒளி வீசும். பற்கள் உறுதியாகவும் அழகாகவும் இருக்க அதிகமான தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. ஒவ்வொரு ஆகாரத்துக்குப் பிறகும் பிரஷ்ஷினால் பல் துலக்குவது நல்லது. கீழ் ஈறிலிருந்து மேல் நோக்கியும் பிறகு மேல் இருந்து கீழுமாகப் பிரஷ்ஷினால் அழுத்தித் தேய்க்க வேண்டும். பக்கவாட்டில் — கடைவாய்க்குக் கடைவாயாகத் தேய்க்கக் கூடாது.

உடைகளைச் சுத்தமாகக் கவர்ச்சியாக வைத்துக் கொள்ளவும் பிரஷ் பயன்படும். இப்போதெல்லாம் நைலான், நைலக்ஸ், டெரிகாட் என்று செயற்கை நூலினால் ஆன துணிகளைத்தானே அதிகமாக உடுத்துகிறோம். இவைகளைப் பிரஷ் கொண்டு சுத்தப்படுத்தினால் நீண்ட நாட்கள் உழைக்கும். அடித்துத் துவைப்பது பருத்தி ஆடைகளுக்கே பாதகம் செய்யும் போது இவ்வகை ஆடைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? டப்பாப் பையில் சின்னப் பிரஷ் வைத்திருந்தால் பஸ் பிரயாணம் செய்துவிட்டு பள்ளிக்குச் செல்லுமுன் அதைக் கொண்டு கவுன், ஸ்கர்ட்களில் படிந்துள்ள தூசிப் புழுதியை ஒரு தடவை பிரஷ் செய்து கொண்டு வகுப்புக்குள் நுழைந்தால் எப்படிப் பளீர் என்று தோற்றம் அளிப்பீர்கள். தெரியுமா?

— கே. சாந்தா



நிதியும் நீதியும்

வரபுரத்தில் பணமே குணம் என்று எண்ணி, வட்டிக்கு வட்டி வாங்கி பெட்டியில் வைக்கும் ராம்லால் சேட் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு கருணை என்பது கிழங்காகத்தான் தோன்றியது. ஈவு இரக்கம் இன்றி, ஏழை எளியவர்களை வாட்டி வதைத்துப் பொருளை ஈட்டி வந்தான்.

ஒரு நாள் இந்த சேட் வெளியூருக்குப் போய், தான் கொடுத்திருந்த பணங்களை வசூலித்தான். கொடுத்த நாளையும் பணம் வாங்கும் நாளையும் சேர்த்து, கணக்குப் பார்த்துப் பணங்களைச் சேர்த்து, சிறு சிறு பைகளில் இட்டு மாலை ஆறு மணிக்குத் தன் குதிரை வண்டியில் ஏறி ஊருக்குத் திரும்பினான். வண்டியின் உள்ளே திண்டின் மீது சாய்ந்து சிறிது கண்ணயர்ந்து தூங்கி விட்டான்.

வண்டியில் இருந்த பணப் பைகளில் ஒன்று நழுவிக் கீழே விழுந்து விட்டது. சேட்டு வீட்டுக்கு வந்த பிறகுதான் இதை அறிந்தான். எண்ணூறு வராகன் அடங்கிய பை அது. ''ஆ'' என்று அலறினான். அவனுக்கு உலகமே அழிந்து விட்டது போல் பதட்டம் உண்டாகியது. ''ஐயோ! பணம் போய் விட்டதே. எடுத்தவன் கொடுக்கின்ற காலமா இது? தெய்வமே! என் பணம் போய்விட்டதே!'' என்று கூறிப் பதறிப் போனான்.

ஒரு தண்டோராப் போடுபவனை அழைத்து ''ராம்லால் சேட்டின் பணப் பை வண்டியிலிருந்து விழுந்து விட்டது. அதை எடுத்தவர்கள் கொடுத்தால் அவர்களுக்கு நூறு வராகன் இனாம் தரப்படும்'' என்று தண்டோராப் போடச் செய்தான்.

அந்த நகரில் அன்பும் பண்பும் நேர்மையும் உடைய பிரமநாயகன் என்ற அன்பர் ஒருவர் வாழ்ந்தார். அவருக்கு வறுமையாகிய நோய் பிடித்திருந்தது. குடும்பத்தில் மனைவியும் மக்களும் பட்டினியால் வாடி வருந்தினர். அந்த ஏழை காலை ஏழரை மணிக்கு சாலையில் நடந்து கொண்டிருந்தார். ''இறைவா இது என்ன உலகம்? உன்னை நினைந்து நினைந்து உருகும் உத்தம அடியார்கள் மிடியால் வாடி வருந்துகின்றார்கள். நீதி நெறி அறியாத கொடுமையாளர்கள் செல்வ வளத்தில் நீந்தி மகிழ்கின்றார்கள். இது என்ன நியாயமோ? பொய்மை அறியாத அடியேன் வறுமையான சிறுமையால், தீயில் வீழ்ந்த புழுவைப் போல நெளிகின்றேனே'' என்று புலம்பிக் கொண்டு நடந்தார்.

சாலையோரத்தில் இருட்டில் இருந்த பணப்பையைக் கண்டார். அவருடைய மனத்தில் ஒரு கிளுகிளுப்பு உண்டாகியது. இறைவன் தந்தான் போலும் என்று கருதிப் பணப் பையை எடுத்துக் கொண்டு போய் வீட்டில் வைத்தார். அந்தச் சமயம் அவர் காதில் தண்டோராச் சத்தம் கேட்டது.

பிரமநாயகம் யோசிக்கின்றார். 'பணம் ராம்லால் சேட்டுக்குரியது. அதனை உடையவனிடம் சேர்ப்பிப்பதுதான் நியாயம். நமக்கு எத்தனைதான் துன்பம் இருப்பினும் நேர்மை தவறக் கூடாது. எடுத்தவன் கொடுத்தால் நூறு வராகன் தருவதாகத் தண்



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

டோராப் போடப்பட்டுள்ளது. அதை வாங்கி நம் தெருவில் உள்ள இடிந்த விநாயகர் கோவிலைப் பழுது பார்க்க வேண்டும்' என்று எண்ணினார்.

அன்றிரவு சேட்டு கண்ணையே மூடவில்லை. ஒரே கவலை. துடித்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் காலை. பிரமநாயகம் நீராடி, நீறணிந்து பணப் பையுடன் சேட்டு வீட்டுக்குச் சென்றார். காவலன் அனுமதி பெற்று உள்ளே போனார். சேட்டு திண்டுகள் சூழ்ந்த மெத்தையிலே சாய்ந்து கொண்டிருந்தார். பிரமநாயகரைப் பார்த்தார். அவர் திருநீறும் உருத்திராட்ச மாலையும் பூண்டு சிவப்பழமாகக் காட்சியளித்தார். ஏதோ உதவி கேட்க வந்திருப்பார் போலும் என்று எண்ணிய சேட் ''யார் நீ? காலங் காலையில் எங்கு வந்தாய்?'' என்று உரத்த குரலில் அதட்டிக் கேட்டார்

பிரமநாயகர், ''சேட்ஜீ! நேற்று இரவு ஒரு பணப் பை கண்டு எடுத்தேன். உடையவர் கேட்டால் உடைமையை உடையவரிடம் சேர்ப்பிப்போமென்று கொண்டு போய் என் வீட்டில் வைத்தேன். தண்டோராவால் பணம் உம்முடையது என்று அறிந்தேன். எடுத்தவர்கள் கொடுத்தால் நூறு வராகன் தருவதாகவும் தண்டோராவில் அறிவிக்கப்பட்டது. நான் எடுத்த பணப் பை இது. பெற்றுக் கொள்ளும்'' என்று பையை எடுத்துக் கொடுத்தார். அதைப் பார்த்ததும் சேட் மாண்ட உயிர் மீண்டதாக எண்ணி மகிழ்ந்தார்.


பணத்தை எண்ணிப் பார்த்தார். எண்ணூறு வராகன் சரியாக இருந்தது. பையைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, ''ஐயா! நல்லது. உமக்கு நன்றி. போய் வாரும்'' என்றார்.

''தாங்கள் எடுத்தவர் கொடுத்தால் நூறு வராகன் தருவதாகச் சொன்னீரே? எங்கள் தெருவில் இடிந்த பிள்ளையார் கோவிலைப் பழுது பார்க்க அதனைக் கொடும்.''

''ஓய்! பேராசை பிடித்தவனே! அறிவில்லாதவனே! அந்தப் பையில் தொள்ளாயிரம் வராகன் வைத்திருந்தேன். இப்போது எண்ணூறு வராகன் தான் இருக்கிறது. நீயே நூறு வராகன் எடுத்துக்கொண்டு, என்னிடம் மறுபடியும் நூறு வராகன் கேட்கின்றாயே? இந்தக் காலத்தில் நீதி நெறியே கிடையாது. இங்கே ஒரு கணமும் நிற்காதே. போ வெளியே. ஏய், கூர்க்கா! இந்தப் பயலை வெளியே இழுத்து விடு. நாயை அவிழ்த்து விடு'' என்று சிம்மம் போல் கர்ஜித்தார்.

பிரமநாயகர் திகைத்தார். ஏளனமாக நகைத்தார். மௌனமாக வெளியேறினார். அந்நகரில் உள்ள நியாய சபைக்குப் போய் நியாயாதிபதியிடம் தமது வழக்கைக் கூறினார்.

நியாயாதிபதி சேட்டை அழைத்து வரச் செய்தார். சேட் விரல்கள் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று வைர மோதிரங்களுடன், பெரிய பட்டுத் தலைப்பாகையுடன் நியாயஸ்தலம் போய் நீதிபதியைக் கும்பிட்டார். இந்த நியாயத்தை அறிய மக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள்.



நீதிபதி: பிரமநாயகரே! உமது வழக்கு யாது?

பிரமநாயகர்: நீதிபதியே! நான் வறுமையில் செம்மையுடையவன். பிறர் பொருளை விரும்பாதவன். நேற்று இரவு சாலை ஓரத்தில் பணப் பையைக் கண்டு எடுத்தேன். பணம் ராம்லால் சேட்டுக்கு உரியது. எடுத்தவர்கள் கொடுத்தால் நூறு வராகன் இனும் தருவதாகத் தண்டோரா அறிவிக்கப்பட்டது. அதனைச் சேட்ஜியிடம் தந்து நூறு வராகன் கேட்டேன். தர மறுக்கின்றார்.''

நீதிபதி: சேட்ஜி! உமது வாக்கு மூலம் யாது?

சேட்: நீதிபதியே! நான் கோமுட்டிகவரன். பொய் சொல்ல மாட்டேன். என் பையில் தொள்ளாயிரம் வராகன்கள் இருந்தன. இப்போது எண்ணூறு வராகன்கள் மட்டுமே இருக்கின்றன. இவனே நூறு வராகன் எடுத்துக் கொண்டு என்னை மறுபடியும் நூறு வராகன் தருமாறு கேட்கின்றான். இவன் பேராசைக்காரன். ஆதலால் நான் நூறு வராகன் தர நியாயமில்லை''

நீதிபதி அந்தப் பணப்பையை நியாய ஸ்தலத்துக்குக் கொண்டு வரச் செய்து எண்ணிப் பார்த்தார். எண்ணூறு வராகன்கள் இருந்தன. அவருக்கு உண்மை விளங்கியது. அடியில் கண்டவாறு தீர்ப்புக் கூறினார்:

''சபையோர்களே! ஜூரிகளே! சேட்ஜியின் வார்த்தையை நான் முற்றிலும் நம்புகிறேன். இவர் கோமுட்டிகவரர். இவருக்கு நூறு வராகன் பெரிதன்று. இவர் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஆதலால் சேட்ஜி கூறுவது உண்மைதான். அவருடைய பையில் தொள்ளாயிரம் வராகன்தான் இருந்திருக்க வேண்டும்.

''ஆனால் இந்தப் பிரமநாயகர் உத்தம குணம் படைத்தவர். பிறர் பொருளை விரும்பாதவர். இவர் பணப் பையை எடுத்ததற்குக் கடவுளையன்றி வேறு சாட்சி இல்லை. இவர் நினைத்திருந்தால் முழுவதும் இவரே எடுத்துக்கொண்டிருக்கலாம். நீதிக்கும் தெய்வத்துக்கும் பயந்து வலியக் கொண்டு போய்ப் பணப் பையை ஒப்படைத்திருக்கிறார். ஆதலால் இவர் இதில் இருந்து நூறு வராகன் எடுத்திருக்க மாட்டார். சேட்டின் வராகன் அடங்கிய பை வேறு யாரிடமோ அகப்பட்டுள்ளது. எண்ணூறு வராகன் அடங்கிய இந்தப் பணப்பை சேட்ஜிக்கு உரியதன்று. பிரமநாயகரே! இதனை நீர் எடுத்துக் கொண்டு போய் பிள்ளையார் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யும். சேட்டுக்குரிய தொள்ளாயிரம் அடங்கிய பணப் பையை எவன் எடுத்தானோ அது கிடைக்கும்போது நியாயம் வழங்குவோம். சேட்ஜி நீர் உத்தமர். போய் வாரும்'' என்றார்.

சேட்டு தன் ஆசை தன்னைக் கெடுத்ததை எண்ணி ஏமாந்து வீட்டுக்குத் திரும்பிப் போனார்.

பணப் பையுடன் பிரமநாயகர் தன் இருப்பிடம் சேர்ந்தார். நீதிபதியின் சீரிய, கூரிய நியாயத் தீர்ப்பைக் கேட்டு மக்கள் கைகொட்டி ஆரவாரம் செய்து நீதிபதியை மெச்சினார்கள்.

பாடலாசிரியர் யார்?

'ஸரஸன்'

நீங்கள் எல்லோரும் நன்றாகப் பாடுவீர்கள் என நினைக்கிறேன். ஒருவேளை பாடாவிட்டாலும், பிறர் பாடுவதை யாவது கேட்டிருப்பீர்கள். அந்தப் பாடல் இன்னாரால் இயற்றப்பட்டவை என்பதும் நீங்கள் அறிந்திருக்கலாம். உதாரணமாக 'மாலே மணிவண்ணா' என்ற பாடலை நிச்சயம் கேட்டிருக்கலாமே. அந்தப் பாடலை இயற்றியது யார் என்று கேட்டால், தயங்காமல் 'ஆண்டாள்' என்று சொல்லிவிடுவீர்கள் அல்லவா? பலே! அதே போல, கீழே சில பாடல்களின் முதலடி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்பாடல்களை இயற்றியது யார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

1. மாயனை மன்னு வடமதுரை. 2. பித்தா பிறைசூடி. 3. யாரோ இவர் யாரோ. 4. நன்றே வருகினும் தீதே விளைகினும், 5. பித்தம் தெளிய மருந்தொன்று, 6. குலம் தரும் செல்வம் தந்திடும், 7. ஆதியும் அந்தமும் இல்லா, 8. காணக்கண் கோடி வேண்டும், 9. அபகார நிந்தை பட்டுழலாதே, 10. அலைபாயுதே கண்ணா, 11. இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம், 12. தீராத விளையாட்டுப் பிள்ளை, 13. பச்சை மாமலை போல் மேனி, 14. பல்லாண்டு பல்லாண்டு, 15. தோடுடைய செவியன், 16. மாதர் பிறைக் கண்ணியானை, 17. காற்றினிலே வரும் கீதம்.

விடை: 1. ஆண்டாள் (திருப்பாவை); 2. சுந்தரமூர்த்தி நாயனார் (தேவாரம்); 3. அருணாசலக் கவிராயர்; 4. அபிராம பட்டர் (அபிராமி அந்தாதி); 5. கோபால கிருஷ்ண பாரதி(நந்தன் சரித்திரக் கீர்த்தனை); 6. திருமங்கையாழ்வார் (திவ்யப் பிரபந்தம்); , 7. மாணிக்கவாசகர் (திருவெம்பாவை); 8. பாபநாசம் சிவன்; 9. அருணகிரிநாதர் (திருப்புகழ்); 10. ஊத்துக்காடு வெங்கட சுப்பையர்; 11. கம்பர்(ராமாயணம்); 12. சுப்பிரமணியபாரதி; 13. தொண்டரடிப்பொடியாழ்வார்; 14. பெரியாழ்வார்; 15. திருஞானசம்பந்தர் (தேவாரம்); திருநாவுக்கரசு ஸ்வாமிகள் (தேவாரம்); 17. அமரர் கல்கி.

கழுதையும் உப்பு மூட்டையும்



கவிமேகம்

குப்பன் என்ற ஒரு வணிகன்
குண்டுக் கழுதை மீதினிலே
உப்புச் சுமையை ஏற்றி வந்தான்
ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

முட்டிக் கழுதை மூட்டையுடன்
முன்னால் இருந்த ஓடையிலே
குட்டிக் கரணம் போட்டது
குழியில் நீரில் விழுந்ததடா

மட்டிக் கழுதை கரணம் போட்டு
மலங்க நீரில் விழுந்ததனால்
கட்டி வைத்த உப்பெல்லாம்
கரைந்தே நீரில் போனதடா

உப்புப் பாரம் குறைந்ததனால்
உள்ளம் மகிழ்ந்தே அக்கழுதை
தப்புக் கணக்குப் போட்டதடா
தாவிக் குதித்தே சென்றதடா

மீண்டும் ஒரு நாள் உப்போடு
மெதுவாய் அவ்வழி வரும்போது
வேண்டும் என்றே தண்ணீரில்
விழுந்தது கழுதை மூட்டையுடன்


குப்பன் கழுதை எண்ணத்தை
குறிப்பால் அறிந்தான் அப்போது
தப்புக் கணக்கைப் போக்குதற்கே
தக்க தருணம் பார்த்திருந்தான்


புத்தியற்ற கழுதையின் மேல்
பொதியாய் மணலை ஏற்றிவைத்தே
மெத்த உள்ள மகிழ்ச்சியுடன்
மெதுவாய்க் குப்பன் நடந்துவந்தான்

அருவிக் கருகே வந்தவுடன்
அன்றும் கழுதை காலிடறி
மறுமுறை ஓடையில் விழுந்ததடா
மணலும் நீரில் நனைந்ததடா

மதியீனத்தால் அக்கழுதை
மணலை நீரில் நனைத்ததினால்
பொதியும் மிகவே கனத்ததடா
புண்ணாய் முதுகும் போச்சுதடா

''ஒருநாள் ஒருவரை ஏமாற்றி
உலகில் ஒருவர் வாழ்ந்திடலாம்
மறுநாள் மீண்டும் பிழைசெய்தால்
மக்கள் அவரை விடமாட்டார்''







காட்டில்

நல்ல தக்காளிப் பழமாக எங்கே கிடைக்கும் என்று முயல் அலைந்து கொண்டிருந்தபோதுதான் குரங்கைச் சந்திக்க நேர்ந்தது.

"உன்னைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். நல்ல வேளையாக நீ என் கண்ணிலே பட்டாய்!" என்று சந்தோஷப்பட்டது குரங்கு.

"என்னை எதற்காகத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டது முயல்.

"நீ விஷயம் எதுவுமே கேள்விப்படவில்லையா?"

"இல்லையே!"

"சொல்கிறேன், கேள். வருகிற தீபாவளி தினத்திலிருந்து நம்ம காட்டிலே டெலிவிஷன் நிலையம் இயங்க ஆரம்பிக்கப் போகிறது!"

"அடடே! அப்படியா? யார் ஆரம்பிக்கிறார்கள்?"

"வேறு யாருக்கு அந்தச் சாமர்த்தியம் இருக்கிறது? எல்லாம் நான்தான்!"

"ரொம்ப சந்தோஷம்....."

"டெலிவிஷனுக்கு உன் உதவி நிரம்பத் தேவைப்படுகிறது......"

"என் உதவியா? எதற்கு?"


"நீதான் இந்தச் செய்தியைக் காடு முழுவதும் பரப்ப வேண்டும்....! அது மட்டுமல்ல; டி. வி. செட்டுகளை மளமள என்று விற்பனை செய்தாக வேண்டும். உன்னை விட்டால் சுறுசுறுப்பாக வேலை செய்ய யார் இருக்கிறார்கள் இங்கே...? இப்படி வா, எல்லா விவரமும் சொல்கிறேன்....!" என்று முயலின் தோள் மீது கையைப் போட்டு அழைத்துக் கொண்டு சென்றது குரங்கு.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பார்த்தால் அந்தக்காடு, காடு மாதிரியே தோற்றம் தரவில்லை. நகரம் போலவே மரம், செடி, கொடி – எங்கு பார்த்தாலும் டெலிவிஷன் பற்றிய வர்ணப் போஸ்டர்கள் காட்சி அளித்தன. தோரணங்களும் ஏராளம். போதாக்குறைக்கு முயலின் உதவியாளர்கள் ஒலிபெருக்கி மூலம், "டெலிவிஷன் வருகிறது! தீபாவளி முதல்!" என்று அறிவித்துக் காட்டையே அதிர வைத்துக் கொண்டிருந்தன.

காட்டின் முக்கியமான பகுதிகளில் டி. வி. செட்களை விற்பனை செய்யப் பல கடைகளைத் தொடங்கியது முயல். விளம்பரக் கவர்ச்சியில் மயங்கிய பல மிருகங்கள் போட்டி போட்டுக் கொண்டு டி.வி. செட்களை வாங்க முன்வந்தன. குரங்கின் ஆலோசனைப்படி எல்லா மிருகங்களிடமிருந்தும் அட்வான்ஸ் தொகையைப் பெற்றுக் கொண்டு, "தீபாவளிக்கு முதல் நாள் வந்து செட்களை வாங்கிக் கொண்டு போங்கள்!" என்று பதில் சொல்லி அனுப்பியது முயல்.

காடு பூராவும் டி. வி. பற்றிய பேச்சுத்தான். "உங்கள் வீட்டில் வாங்குவீர்களா?", "நாங்கள் முதல்நாளே அட்வான்ஸ் கொடுத்துவிட்டோம்!" "டி.வி.யில் டார்ஜான் படங்கள்கூடக் காட்டப் போகிறார்களாமே?"—இப்படிப்பட்ட பேச்சுக்கள்தாம் எங்கு பார்த்தாலும்.

தீபாவளிக்கு முதல் நாளன்று டி.வி. செட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டிருந்த மிருகங்கள் எல்லாம் முயலின் கடைகளை முற்றுகையிட ஆரம்பித்



தன. முயலின் உதவியாளர்களோ, ''மன்னியுங்கள்..... எங்களுக்கு வந்த அத்தனை செட்களையும் கொடுத்துவிட்டோம். இனி இந்தத் தொழிற்சாலையிலிருந்து வந்தவுடன் உங்களுக்குத் தருகிறோம்...'' என்று பதில் கூறின.

மிருகங்கள் ஒன்றுக்கொன்று விசாரித்துப் பார்த்ததில் யாருக்குமே செட்கள் கொடுக்கப்படவில்லை என்ற உண்மை வெளியாயிற்று. ''அந்த முயல் பயலைப் பிடித்து உதைக்க வேண்டும்! என்ன ஏமாற்று வேலை இது!'' என்று மிருகங்கள் கோபாவேசத்துடன் முயலின் வீட்டை நோக்கிப் படை எடுத்தன.

முயல் அப்போதுதான் பட்டாஸ் வாங்கலாம் எனப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. மிருகங்கள் எல்லாமாக அதைச் சூழ்ந்து கொண்டவுடன், ''ஐயையோ! எனக்கு ஒன்றுமே தெரியாது! குரங்குதான் என்னை இம்மாதிரிப் பணம் வசூல் செய்து கொடுக்கும்படிக் கூறியது!.... என்னை விட்டுவிடுங்கள்!'' என்று அலறியது.

உடனடியாகக் குரங்கைச் சந்தித்து மிருகங்கள் முறையிட்டன. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுப் புன்னகையுடன், ''உங்களுக்கு டெலிவிஷன் பார்க்க வேண்டும்....அவ்வளவுதானே? நாளை சாயந்திரம் ஏழு மணிக்கு ஆலமரத்தடிக்கு வந்துவிடுங்கள்..... டி. வி. பார்க்கலாம்!'' என்று பதில் சொல்லி அனுப்பியது குரங்கு.

தீபாவளி அன்று மிருகங்கள் எல்லாம் குரங்கு சொன்னபடியே ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தன. பிரும்மாண்டமான டி. வி. செட் ஒன்று அங்கே இருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தன. ''எல்லோரும் அமைதியாக உட்கார்ந்திருந்து நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டுப் போங்கள்!'' என்றது குரங்கு.

சரியாக ஏழு மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கின. முதலில் மான் நடனம் ஆடியது. அடுத்தது கிளிகளின் கோஷ்டி கானம். மூன்றாவது நிகழ்ச்சி சேவல்களின் ரோஷமான சண்டை. நான்காவது, காட்டின் தலைசிறந்த நடிகரான யானையுடன் பேட்டி. அந்த நிகழ்ச்சி பாதி நடந்து கொண்டிருந்தபோது முன் வரிசையில் உட்கார்ந்திருந்த குறும்புக்காரக் குள்ள நரி ஒன்று சும்மா இராமல் கம்பி மத்தாப்பு ஒன்றைக் கொளுத்தி டெலிவிஷன் செட்டின் பக்கமாகக் கொண்டு போய்க் காட்டியது.

அவ்வளவுதான்! டெலிவிஷனில் பேட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த யானை திடுமென்று மிரண்டு எழுந்தது. பயங்கரமாக ஒரு முறை பிளிறியது. அடுத்த விநாடியே அந்தப் பிரும்



டெலிவிஷன்

தாஜா

மாண்டமான டி. வி. செட்டுக்குள்ளிருந்து யானை வெளியே வந்தே விட்டது !

மிருகங்கள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லையாதலால், "ஹோ !... ஹோ! ஹோ !" என்று கூச்சல் போட ஆரம்பித்தன. யானை — ஆம், அசல் யானைதான் — டி. வி. செட்டைத் துதிக்கையினால் தூக்கி எறிந்துவிட்டு மிருகங்களை நோக்கிப் பாய ஆரம்பித்தது. மிருகங்கள் எல்லாம் பயந்து அடித்துக்கொண்டு ஓடத் தொடங்கின. கூட்டத்தில் ஏகப்பட்ட கூச்சல், குழப்பம், அமளி, அடிதடி ! நல்ல வேளையாகப் போலீஸ் புலி அப்போது தன் ஆட்களுடன் அந்தப் பக்கமாக வரவே, அது தலையிட்டுக் கூட்டத்தில் அமைதியை ஏற்படுத்தியது. மிருகங்கள் எல்லாம் புலியிடம் குரங்கைப் பற்றிப் புகார் செய்தன.

"எங்கே அந்தக் குரங்கு?" என்று கேட்டு அதைக் கைது செய்தது புலி. "டெலிவிஷன் பார்க்க வேண்டும் என்ற இந்த மிருகங்களின் ஆசையை வைத்துக் கொண்டு பணம் பண்ணலாம் என்று முயன்றேன். உண்மையில் காட்டில் டெலிவிஷனும் வரவில்லை, எலிவிஷமும் வரவில்லை. அந்தந்த மிருகங்களை நேரில் வரவழைத்து இந்தப் பெட்டிக்கு உள்ளேயிருந்தபடியே ஆடவும், பாடவும் வைத்து எல்லோரையும் ஏமாற்றவும் முயன்றேன். என்னை மன்னியுங்கள். என் சார்பில் முயல் வாங்கிய அட்வான்ஸ் தொகைகளைத் திருப்பித் தந்து விடுகிறேன். என்னை விட்டு விடுங்கள் !" என்று குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்றாடியது குரங்கு.

"சரி. இந்தத் தடவை போனால் போகிறது என்று விடுகிறேன். இன்னொரு தரம் தப்புத் தண்டாவில் இறங்கினால் கம்பி எண்ண வேண்டியதுதான்" என்று குரங்கைக் கடுமையாக எச்சரித்து, விட்டு விட்டது போலீஸ் புலி.

குரங்குக்கு உடந்தையாக இருந்த முயல் எங்கோ தலை மறைவாகிவிட்டது. 'காட்டைவிட நாடு — நகரங்களிலே தான் தக்காளிப் பழமும் முட்டைக் கோசும் நன்றாக இருக்கின்றன' என்கிற காரணத்தைச் சொல்லிக் கொண்டு அது நகரப் பகுதிக்கே வந்துவிட்டதாக இதர மிருகங்கள் பேசிக் கொண்டன.

உங்கள் ஊரில் புதிதாக முயல் ஏதாவது வந்து சேர்ந்திருக்கிறதா பாருங்கள் !

காசியில் நடந்தது!

வெகு காலத்துக்கு முன்பு காசியில் ஓர் அந்தணர் வசித்து வந்தார். மிகுந்த ஆசாரமும், பக்தியும், நல்ல மனமும் உடையவராக இருந்தார் அவர். தினமும் அதிகாலையில் எழுந்து கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு விசுவேசுவரர் கோவிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து தன் பூஜைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புவார். மனைவி மக்கள் இல்லையாதலால் அன்றன்றைக்கு வேண்டிய ஆகாரத்தை அவரே தன் கையால் சமையல் செய்து கொள்ளுவார். தான் சாப்பிடும் முன் யாராவது ஒரு பிராம்மணருக்கு உணவு படைத்துவிட்டு, பிறகே தான் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சாப்பிடுவதற்கு முன் பதினொரு மணியளவில் மீண்டும் கங்கையில் ஸ்நானம் செய்து உச்சிக்கால பூஜையைக் காணப் போய்விட்டுத் திரும்ப வந்த பிறகே தன் உணவை முடித்துக் கொள்வார். திரும்பவும் மாலை வேளைகளில் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் கங்கையில் ஸ்நானம் செய்து தன் கடன்களை முடித்துக் கொண்டு சாயங்கால பூஜையைக் காணக் கோவிலுக்குச் செல்லுவார். இம்மாதிரி மூன்று காலங்களிலும் ஈசுவரனையே மனதில் தியானம் செய்து, இதை ஒரு தவம் போலச் செய்து வந்தார். எப்பேர்ப்பட்ட மழையானாலும், காற்றானாலும், குளிரானாலும் பொருட்படுத்த மாட்டார். மூன்று காலங்களிலும் ஸ்நானமும், ஸ்வாமி தரிசனமும் தவறவே தவறாது.

ஒரு சமயம் மழைக்காலம். இரண்டு நாட்களாக இடை விடாது மழை பொழிந்து கொண்டே இருந்தது. கங்கையில் வெள்ளம் கரை புரண்டோடியது. கரையில் நிறையக் கட்டிடங்கள், வீடுகள் அமைந்திருந்தன. அவற்றின் சுவரில் கங்கையின் நீர்மட்டம் ஏறிக்கொண்டே வந்தது. கூளிரான குளிர். இயற்கையின் இந்த ஆர்ப்பாட்டங்கள் பிராம்மணர் மனதில் பதியவில்லை. அவர் அந்த கொட்டும் மழையிலும், குளிரிலும் விடியற்காலையில் கங்கையின் கரையோரமாக நின்று ஸ்நானத்தை முடித்துக் கொண்டு அந்த மழையிலேயே விசுவேசுவரரைத் தரிசனம் செய்து விட்டு வந்து தமது

புஷ்பராஜ்



எப்படிக் கூட்டினாலும்....

மேலிருந்து கீழே, இடமிருந்து வலமாய், குறுக்கே எப்படிக் கூட்டினாலும் ஒரே எண் வரும் மாயச் சதுரங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதோ, ஒரு மாய ஸ்வஸ்திக்! வரிசையாக உள்ள எந்த நான்கு கட்டங்களிலுள்ள எண்களைக் கூட்டினாலும் ஒரே எண்தான் வரும்! கூட்டித்தான் பாருங்களேன்.

— எம். சிவசுப்ரமணியன்

22		6	9	8	23
1		15			
20		12	11	18	5
3	16	13	14		10
			17		7
21	2	19	4		24

சமையல் வேலைகளை முடித்துக் கொண்டார்.

இடையில் காற்றின் வேகமும் அதிகரித்து விட்டது. மரங்கள் சடசடவென்று முறிந்து விழ ஆரம்பித்தன. பிராம்மணருக்கு இப்போதுதான் கவலை தோன்ற ஆரம்பித்தது. இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அல்ல. தினந்தோறும் தான் சாப்பிடும் முன் மற்றொரு பிராம்மணருக்கு உணவு படைத்துப் பிறகு உண்பாரல்லவா? இந்த நிலையில் பிராம்மணர் கிடைக்காதது தான் காரணம். யாராவது தெரு வழியே போனால் கூப்பிடலாம் என்று நினைத்து வெகு நேரம் வரை வாசல் திண்ணையில் நின்று கொண்டே இருந்தார். ஒருவரும் போகவில்லை. காற்றான காற்று! ஆளையே தூக்கிக் கொண்டு போய்விடும் போலிருந்தது. இதெல்லாம் அவர் மனத்தில் பதியவே இல்லை. விருந்து ஓம்ப யாராவது பிராம்மணர் கிடைக்க மாட்டாரா, அவருக்கு உணவு அளித்துவிட்டு சுவாமியைத் தரிசனம் செய்யப் போக வேண்டுமே. உச்சிக் காலப் பூஜைக்கு நேரமாகிவிடுமே என்ன செய்வது?' இதுதான் அவர் கவலை. அவர் உள்ளம் தவித்தது. 'சர்வேச்வரா இதென்ன சோதனை? உன்னைத் தரிசிக்க முடியாமல் போய் விடுமோ!' என்று அவர் உள்ளம் பாகாய் உருகியது. நேரமோ போய்க் கொண்டிருந்தது.

கடைசியில் வெகு நேரத்துக்குப்பிறகு ஒரு வயதான பிராம்மணர் கம்பு ஊன்றியவாறே சொட்டச் சொட்ட நனைந்தபடி திண்ணையில் வந்து அமர்ந்தார். பிராம்மணர் அவரிடம் மிகவும் கனிவுடன் பேசி அவரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று அவரது ஆடைகளைக் களையச் சொல்லி, புதிய உலர்ந்த ஆடைகளைக் கொடுத்து அணியச் செய்தார். இருவருக்கும் இரண்டு வாழை இலைகளைப் போட்டுக் காய் கறிகளைப் பரிமாறி இரண்டு இலைகளிலும் அன்னம் வைத்தார். கோவிலில் உச்சிக்காலப் பூஜைக்கான மணியடிக்க ஆரம்பித்தது காதில் விழுந்தது. பரபரப்புடன் கிழவரிடம் சென்று, ''ஒரே ஒரு நிமிஷம்... உச்சிக்கால பூஜை ஆரம்பமாகி விட்டது. ஸ்வாமியை தரிசித்து விட்டு ஓடி வந்து விடுகிறேன்'' என்று கூறி அவரை இலையின் எதிரில் மணைபோட்டு அமரச் செய்து ஓட்டமும் நடையுமாகக் கோவிலுக்குச் சென்றார். காற்றும் மழையும் நிற்கவே இல்லை; தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்ப ஓடி வந்து வீட்டுக்குள் நுழைந்தார். இலையின் முன் அமர்ந்திருந்த கிழவரைக் காணாமல் திகைத்தார். சுற்று முற்றும் தேடினார். பிறகு தான் உணர்ந்தார். இரண்டு இலைகளிலும் தனித் தனியே பரிமாறிய சாதம் இரண்டு பாகமும் ஒன்றாகச் சேர்ந்து லிங்க வடிவில் தோற்றமளித்தது. பிராம்மணருக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது அசரீரி ஒலித்தது, ''எம்மைத் தரிசிக்க இவ்வளவு துன்பங்கள் படவேண்டாம். இங்கேயே தரிசித்து மகிழலாம்'' என்ற வாக்கு ஒலித்தது. மெய்சிலிர்த்து நின்றார் பக்தர். வந்த கிழவர், எல்லாம் வல்ல இறைவனே என உணர்ந்தார். அவர் மகிழ்ச்சிக்கு ஈடே இல்லை.

அந்த இரண்டு பங்கு சாதமும் இணைந்து லிங்கமான தோற்றம்தான் தற்போது காசியில் கங்கைக் கரையில் கேதார் கட்டத்தில் அமைந்த கேதார் நாத் கோவிலில் காணப்படும் லிங்கம். இப்போதும் தொட்டுப் பார்த்தால் 'கொத கொழ'வென்று சோற்றுப் பருக்கையை கைவிரல்களில் தேய்த்தால் எவ்வாறு கொழ கொழத்து வழுக்குமோ அதுபோல் இருக்கிறது.

மூன்று கேள்விகள்!

கவிஞர் தமிழ்முடி

புகழ்பெற்ற அந்தத் தமிழரசர் ஒருவர் தமக்கு வேண்டிய தலைமை அமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினார். அந்த ஒருவரை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலே, பொது மக்கள் விரும்பி ஏற்கும் முறையிலே தேர்ந்தெடுக்க முடிவு செய்தார்.

'தாம் ஓலையில் எழுதி அனுப்பும் மூன்று கேள்விகளுக்கும், முறையான சரியான விடை யளிப்பவர் யாரோ, அவர்தாம் தம் நாட்டின் தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவார்!' என்ற அறிவிப்புடன் மூன்று கேள்விகளை அனுப்பினார் அரசர்.

இந்த உலகிலே மலையை விடப் பெரியது எது? ஏன்?

இந்த உலகை விடப் பெரியது எது? ஏன்?

இந்தக் கடலை விடப் பெரியது எது? ஏன்?

இந்த மூன்று கேள்விகளை எழுதிய ஓலையைத் தமிழ்நாடு முழுவதும் தக்கார் வாயிலாக அனுப்பி வைத்தார் அரசர்!

பல மாதங்கள் கடந்தன. ஆயினும் எவரிடம் இருந்தும், எவ்விதப் பதிலும் வரவில்லை. அதனால் அரசர் ஏமாற்றம் அடைந்தார்; ஏங்கினார். தலைமை அமைச்சரைத் தேர்ந்தெடுக்கச் செய்யும் முயற்சியும், வழியும் தோற்றுவிடுமோ என்று கலக்கம் அடைந்தார்.


இவ்வாறு தோற்றுவிட்டால் பெரும் அவமானமாகிவிடுமே என்று வருந்தி, வாடினார். நம்பிக்கையும் இழக்கும் நிலைக்கு ஆளானார்.

அந்தச் சமயத்திலே அரசருக்கு அவர் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் வந்து சேர்ந்தது, ஒரே ஒருவரிடம் இருந்து! பெரும் நம்பிக்கையுடன் அந்தப் பதிலைப் படித்துப் பார்த்தார். மகிழ்ச்சி தாங்கவில்லை! தம்மையே மறந்தவராய் 'ஆகா! ஆகா!' என்று கூறி ஆர்ப்பரித்தார்.

அரசருக்கு அருகிலே இருந்தவர்கள், அவருக்கு வந்த பதில் யாது என்பதை அறியும் ஆவலுடன் அரசரையே நோக்கிய வண்ணமாக இருந்தார்கள். அதைக் குறிப்பால் உணர்ந்த அரசர், வந்த விடைகளைப் படித்துக் காட்டினார்.

முதற் கேள்வி: மலையை விடப் பெரியது எது? ஏன்? — அதற்கு வந்திருந்த விடை:

எக்காலத்திலும் எதற்காகவும் தாம் ஏற்ற நிலையான கொள்கையில் இருந்து தவறாமல் வாழ்பவனின் தோற்றம்தான் மலையைவிடப் பெரியது. ஏனென்றால், மலை நிலையிலும், அளவிலும் நெடிதோங்கி வளர்ந்திருந்தாலும், பெரிய பூகம்பம், எரிமலை போன்ற அதிர்ச்சிகள் வந்தால் தன்நிலை குலைந்து தடுமாறிச் சிதைந்து விடும்! ஆனால் தன் கொள்கையிலேயே பிடிப்பும் உறுதியும் உடையவன் உயிரே போகும் சோதனையும், வேதனையும் ஏற்பட்டாலும் தன் உயிரை விட்டேனும் தான் கொண்ட கொள்கையை நிலைநிறுத்துவானே தவிர உயிருக்காகக் கொண்ட கொள்கையை விட்டுப் பிறழ மாட்டான். இதற்கான அகச் சான்று வள்ளுவரின் வாக்காகிய





அட்டையிலே :

உச்சி மேலே உயரப் போகும் வாணத்தைக் காணோம்
பிச்சி வச்ச திரிபட்டாசு அத்தனையும் காணோம்
வச்சிருந்த வாணவெடி எடுத்த தாரடா
பிச்சிடுவேன், எடுத்தவங்க திருப்பித் தராட்டா

வண்ணப்படம்: ஊரலிங்கம்

''நிலையில் திரியாது. அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது! (குறள்)

இரண்டாம் கேள்வி:- இந்த உலகத்தை விடப் பெரியது எது? ஏன்? அதற்கான விடை, ''எவரிடமும், எவ்விதக் கைம்மாறும் கருதாமல், தக்க சமயத்தில் ஒருவர் செய்த நன்றி. அது அளவில் சிறியதாக இருந்தாலும் அவர் செய்த அந்தக் கால நிலையின் அருமையை நோக்கினால் அதுவே இந்த உலகத்தை விடப் பெரியதாகும்! இந்த உலகம் மிகப் பெரியதாக இருந்தாலும் ஒருவனுக்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களை அவனுக்குத் தேவையான சமயத்திலே சென்று கேட்டால் உலகத்தினால் உடனே தந்துவிட முடியாது. அதற்கு உரிய பருவம் வந்தால்தான் — தர முடியும்! எப்படியெனில், ஒருவன் மார்கழி மாதத்திலே பனை நுங்கு வேண்டும் என்று இந்த நில உலகத்திடம் கேட்டால் அதை உடனே தர முடியாது. சித்திரை அல்லது வைகாசியிலேதான் தரும். தர முடியும்! ஆனால் உதவி என்று ஒருவன் கேட்ட மாத்திரத்திலேயே அந்த உதவியை அப்பொழுதே ஒருவன் செய்து, அந்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அவன் செய்த அந்தக் கால நிலையில் இந்த உலகத்தைவிட மிகவும் பெரியதாகும்! இதையே திருவள்ளுவர்:

''காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

என்று கூறுகிறார்.

மூன்றாவது கேள்வியோ கடலை விடப் பெரியது எது? ஏன்? என்பது. அதற்கு மன்னருக்குக் கிடைத்த விடை இதோ:

எவ்விதமான பயனையும் கருதாமல், எதிர்பாராமல் ஒருவருக்குச் செய்யும் உதவியே, இந்தக் கடலை விடப் பெரியதாகும். எப்படியென்றால்,

கடல் பெரிதாக இருந்தாலும், 'தாகம்' என்று தன்பால் வந்தவருக்கு உடனே குடிப்பதற்குரிய நல்ல தண்ணீரைத் தந்து உதவ முடியாது. ஆனால் எவ்விதப் பிரதிப் பயனும் கருதி எதிர்பார்க்காமல் உடனே உதவும் தன்மை உடையவர் செய்யும் உதவி கடலை விடப் பெரியதாகும்! பெருமை உடையதும் ஆகும்!

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது!

என்ற திருக்குறளை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மூன்று கேள்விகளுக்கும் உரிய பதில்களை அரசர் படிக்கக் கேட்டதும் அருகிலிருந்த அனைவரும் ''ஆகா! ஆகா!'' என்று ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். இதல்லவா கல்வியின் பயன்! கற்றதின் திறன்! குறளின் வளம்! இந்த விடைகளைத் தந்தவரல்லவா மாபெரும் மேதை! தலைமை அமைச்சராகும் தகுதிபடைத்த சான்றோர்! இவர்தாம் அரச சமூகத்துக்கு ஏற்ற அமைச்சராகும் மாண்பு படைத்தவர்!'' என்று அனைவரும் ஒருமித்துப் பாராட்டிப் போற்றினர்.


அதைக் கேட்ட அரசரும் அளவில்லா மகிழ்ச்சி அடைந்து பூரித்தார். அடுத்த சில நாட்களிலேயே திருக்குறளால் விடையளித்து வென்ற அந்தச் செந்தமிழ்ப் பேரறிஞரை அரச மரியாதைகளுடன் அழைத்து வந்து, தலைமை அமைச்சராக்கிப் பெருமை செய்து பெருமை அடைந்தார் அந்த மன்னர்.

இத்தகைய மதிப்பையும் துதிப்பையும் பெற்ற அந்தப் பேரறிஞரும், பேரரசரும் யார் தெரிகிறதா?

அந்தப் பேரரசர்தாம் சோழ நாட்டின் பெரும் புகழ் வேந்தரான **அநபாயச் சோழன்!**

அந்தப் பேரறிஞர்தாம் குன்றத்தூரிலே பிறந்து, குவலயமெல்லாம் புகழும் பெரிய புராணம் பாடிய அருந்தமிழ்க் கவியரசர் **சேக்கிழார்** பெருமானவார்.

தெரியுமா ?



2039. காட், ஹெர்ரிங், பிரீம் — இவை மீனினங்கள். ஆனால் இதில் ஒன்று மற்ற இரண்டோடும் இணையாத ஓர் இனம். அது என்ன?

2040. ஜாகுவார் (*Jaguevar*) என்ற மிருகத்தை உலகில் எங்கு காண முடியும் ?

2041. ஆண்டனானரிவோ (*Antananarivo*) என்பது எந்த நாட்டின் தலைநகர்?

2042. அர்ஜெண்டினா நாட்டில் பிளேட் நதியின் முகத்துவாரத்தில் ஒரு புகழ்பெற்ற வியாபார ஸ்தலம் உள்ளது. இது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமும்கூட. இதன் பெயர் என்ன?

2043. உலகின் மிகப் பெரிய பாலைவனத்தின் பெயர் என்ன?

2044. லெனின் சமாதி எந்த நகரில் உள்ளது?

2045. ஸ்பானிஷ்காரர்கள் ஒரு நகரத்தைத் தேவதைகளின் நகரம் என்று அழைத்தார்கள். அது எது ?

2046. பிரிட்டனின் மிகப் பழைமையான காலனி இன்றைய கானடா நாட்டின் ஒரு பகுதியாக உள்ளது. அதன் பெயர் என்ன?

2047. பிரான்ஸ் நாட்டு மன்னர் ஒருவர் 1871ல் இங்கிலாந்தில் அகதியாக வாழ்ந்தார். அவர் யார் ?

2048. பிரிட்டனில் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது எந்த ஆண்டில் ?

2049. விக்டோரியா மகாராணிக்குப் பிறகு இங்கிலாந்தின் பட்டத்துக்கு வந்தவர் யார் ?

2050. ஆஸ்கார் பரிசு என்கிறார்களே, அது எதற்காக அளிக்கப்படுகிறது தெரியுமா ?

2051. கத்தோலிக்க மத அமைப்பில் சிவப்புக் குல்லாயை யார் அணிந்திருப்பார்கள் ?

2052. மூன்று மகுடங்களை (*Three Crowns*) அணிந்திருப்பவர் யார்?

2053. ஆங்கிலத்தில் ஒரு வழக்கு. மூன்று 'ஆர்'கள். என்று. (*Three 'R's*) இவை எதைக் குறிக்கின்றன ?

2054. ஏழு கடல்கள் என்று எவைகளைக் குறிப்பிடுகிறார்கள், தெரியுமா?

2055. அமெரிக்காவில் ஹாலிவுட் என்ற புகழ் பெற்ற இடம் ஒரு நகரின் புறநகர்ப் பகுதியாகும். அது எந்த நகரம் ?


2056. பர்மிங்ஹாம் நகரைச் சூழ்ந்துள்ள ஜன நெருக்கம் உள்ள தொழிற்பேட்டைப் பகுதிக்கு என்ன பெயர் தெரியுமா ?

2057. நியூஸிலாந்தின் மிக உயரமான மலையின் பெயர் என்ன?

2058. ஒரு காலத்தில் பல் வைத்தியர்கள் பற்களை வலியின்றி அகற்றுவதற்கு ஒரு வாயுவைப் பயன்படுத்தினார்கள். இதற்குச் சிரிக்க வைக்கும் வாயு (*Laughing Gas*) என்று பெயர். இதன் ரசாயனப் பெயர் தெரியுமா ?

2059. குதிரைச் சவாரி செய்வோரின் பாதங்களைத் தாங்கும் வளையத்துக்கு அங்கவடி — ஸ்டிரப் (*Stirrup*) — என்று பெயர். இதே பெயரோடு நம் உடலில் ஓர் எலும்பு உள்ளது, எங்கே ?

தெரியுமே!



2039. பிரீம் என்பது நல்ல நீரில் - நதிகளில்- வாழும் மீன். மற்ற இரண்டும் உப்பு நீரில் - கடலில்- வாழும் வகை. 2040. தென் அமெரிக்காவில் 2041. மடகாஸ்கர் (மலகாசிக் குடியரசு) நாட்டின் தலைநகர். 2042. ப்யூனஸ் அயர்ஸ். 2043. சஹாரா. 2044. மாஸ்கோ நகரில். 2045. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை. 2046. நியூஃபவுண்ட் லாண்ட். 2047. மூன்றாம் நெப்போலியன் மன்னர். 2048. பொது வேலைநிறுத்தம் 1926ம் ஆண்டில் நிகழ்ந்தது. 2049. ஏழாம் எட்வர்ட் மன்னர். 2050. திரைப்பட உலகில் மிகச் சிறந்த தயாரிப்புக்கு அளிக்கப்படும் மிக உயர்ந்த பரிசு. 2051. கார்டினல்கள். 2052. போப்பாண்டவர். 2053. ரீடிங் - படித்தல் (Reading) ரைட்டிங்- எழுதுதல்(writing)ரித்மெடிக் - கணக்கு (Arithmetic) இம்மூன்றுமே. 2054. ஆர்க்டிக், அண்டார்க்டிக், வடக்கு, தெற்கு பசிபிக் கடல்கள். வடக்கு தெற்கு அட்லாண்டிக் கடல்கள் இந்துமகா சமுத்திரம் ஆகிய ஏழு கடல்களாகும். 2055. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம். 2056. கறுப்பு நகரம் (Black Country) என்று பெயர். 2057. குக் மலை (Mount Cook) 12,349 அடிகள் உயரம். 2058. நைட்ரஸ் (Nitrous) ஆக்ஸைடு. 2059. காதினுள்ளே.

விடுதலை வேட்கை

ஷி.கே.

அவனுக்குப் பதினெட்டு வயது. கட்டிளம் காளைப் பருவம். பிரஷ்யாவின் மன்னர் பிரடரிக்கின் மெய்க்காவல் படையில் ஓர் அதிகாரி அவன். மதிப்பான வேலை. மன்மத உருவம். வான்டெர் டிரங்க் என்பது அவன் பெயர்.

இந்த அழகனிடம் அரசரின் சகோதரியே மயங்கினாள் என்பது வியப்புக்குரிய விஷயமல்ல. அதை மன்னர் விரும்பாததுதான் சங்கடத்தை உண்டாக்கியது. வான்டெர் கைது செய்யப்பட்டான். அவனைக் காராக்கிரகத்தில் அடைத்தார்கள். ஆனால் வான்டெர் அழகன் மட்டுமல்ல; சாமர்த்தியக்காரனும்கூட. சிறைக் காவலர்களை மயக்கி, லஞ்சம் கொடுத்துத் தப்பி விட்டான். ஆஸ்திரிய நாட்டின் படையிலே சேர்ந்து விட்டான். இது நடந்தது 1746ல். சகோதரியைக் களங்கப்படுத்திக் காராக்கிரகத்திலிருந்து தப்பிச் சென்ற கைதியைப் பிரஷ்ய மன்னர் மறந்துவிடவோ மன்னிக்கவோ தயாராக இல்லை. 1754ல் வான்டெர் பிரஷ்யாவுக்குத் திரும்பிய போது மறுபடியும் கைது செய்து மாக்டபர்க் அரண்மனைக் கோட்டையிலேயுள்ள பாதாளச் சிறையில் வைக்கப்பட்டான். இந்த முறை அவனைச் சிறையில் எப்படி வைத்திருந்தார்கள் தெரியுமா? கைகால்களிலும் கழுத்திலும் இரும்புப் பட்டைகளைப் பூட்டி அத்துடன் சங்கிலிகளை இணைத்து அந்தச் சங்கிலிகளின் மறு முனையைக் கோட்டைப் பாதாளச் சிறையின் கருங் கல் சுவரிலே அசைக்க முடியாதபடி பதித்து விட்டார்கள்.

என்ன செய்தால் என்ன? டெர் நம்பிக்கையை இழக்கவில்லை. தனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதுபோல் நடிக்கலானான். சிறைக் காவலர்களும் அதிகாரிகளும் அறைக்கு வரும்போதெல்லாம் அவர்களை நோக்கி வெறி கொண்டவனைப் போல் பாய்வான். தனது தலைமயிரையும் தாடி மீசைகளையும் பிய்த்துக் கொண்டு கத்துவான். இப்படி ஐந்து வருடங்கள் பைத்தியமாக அட்டகாசம் செய்தான். சகிக்க முடியாத அவனது அழுகையையும் ஆர்ப்பாட்டத்தையும் புலம்பலையும் கண்ட ஜெயில் கவர்னர் அவன் நிஜமாகவே பைத்தியமாகி விட்டான் என்று எண்ணிக் காவலர்களைக் கொண்டு அவனைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அகற்றி விடும்படி உத்தரவிட்டார்.

வான்டெர் எதிர்பார்த்ததும் இது தான். கால் கை, கழுத்திலே சங்கிலிகளைக் கட்டியிருந்தால் தப்பிச் செல்லத் திட்டமிட முடியுமா? சிறைக்குள்ளே நடமாட விடுதலை கிடைத்தது. இனி பாதாளச் சிறையிலிருந்து தப்பிச்செல்லத் திட்டமிட்டாக வேண்டும். சுரங்கப் பாதை அமைத்து வெளியேறுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. முதலில் பாதாளச் சிறையிலிருந்து மேல் நோக்கித் தோண்டிப் பிறகு பூமி மட்டத்துக்கு நேராகக் குடைந்து மதில் சுவருக்கு அப்பால் போயாக வேண்டும். சாதாரணமான காரியமா? அசுர வேலையாயிற்றே? அவனிடமிருந்ததெல்லாம் நீர் அருந்துவதற்காக அளிக்கப்பட்டிருந்த ஒரே ஒரு சின்னக் குவளை. சிறைக் கதவிலிருந்து சாமர்த்தியமாக ஒரு சின்ன ஆணியை நெம்பி ஆட்டி அசைத்துப் பெயர்த்துக் கொண்டான். இந்த இரண்டையும் வைத்துக்கொண்டு சுரங்கப் பாதை குடைந்துவிட முடியுமா? முடிந்தது! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகும் என்று கூறுவதுண்டல்லவா?

பாதாளச் சிறையில் தன் அறையில் இருந்த தள வரிசைக் கல்லை ஆணியின் உதவியினால் பூமியைக் கீறிக் கிழித்து மெள்ள மெள்ளப் பெயர்த்து எடுத்தான். சுரங்கப் பாதையைக் குடைய ஆரம்பித்து விட்டான். ஆணியினால் பூமியைக் கீறிக் கிளறுவான். குவளையினால் மண்ணைத் தோண்டிக் குவிப்பான். அது சரி, தோண்டி எடுத்த மண்ணை எங்கே, எப்படி அப்புறப்படுத்துவது?

அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. தள வரிசைக் கல்லைப் பெயர்க்கும்போது அவனது காராக்கிரக அறையின் மூலையில் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்டு மூடப்பட்டிருந்த ஒரு கிணறு இருப்பதைக் கண்டுபிடித்தான். பிறகு என்ன? சுரங்கப் பாதைக்குத் தோண்டிய மண்ணை எல்லாம் அந்தப் பாழுங் கிணற்றில் கொட்டினான். அவன் செய்



யும் செயலைத் துளிக்கூடக் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றியது அந்தப் பாழுங் கிணறு !

ஆனால் குவளை குவளையாக மண்ணைத் தோண்டி எத்தனை பெரிய சுரங்கம் அமைத்துவிட முடியும்? எவ்வளவு பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும்? வான்டெர் தான் மட்டுமே கூனிக் குறுகி நுழையுமளவுக்குச் சுரங்கத்தைத் தோண்டிக் கொண்டு போனான். அப்படி முன்னேறும்போது மேலிருந்து ஒரு கல் இடம் பெயர்ந்து பாதையை அடைத்துக் கொண்டாலும் வழியை நேர் செய்து அதிலிருந்து விடுபடப் பல மணி நேரங்கள் பாடுபட்டாக வேண்டும். இப்படிப் பலதடவை நேர்ந்தது. வான்டெர் சோர்ந்து விடவில்லை.


சுரங்கம் தோண்டும் வேலையை இரவில்தான் செய்வான் வான்டெர். பகலெல்லாம் டஞ்சனில் பைத்தியக்காரக் கைதியாகக் காட்சியளித்தாகவேண்டும். இப்படி முப்பத்தியேழு அடி நீளமுள்ள சுரங்கப் பாதையை அமைக்க வான்டெருக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன.

இட்டமிட்ட காரியத்தை முடித்தேயாகவேண்டும் என்று மன உறுதியும் பிடிவாதமும், ஊக்கமும் உள்ளவர்களுக்குத் தோல்வி என்பது எப்போதும் ஏற்படாது. அத்துடன் உயிர் ஆசையும் சேருமானால் அந்தக் காரியத்தில் எத்தனைத் தடங்கல்கள் ஏற்படினும் அதைத் தகர்த்துக் கொண்டு முன்னேறுவான் அவன்.


கோட்டை மதிலுக்கு வெளியே சுரங்கப் பாதை போய் முடிந்தது. தக்க தருணம் பார்த்து வான்டெர் தன் சிறையிலிருந்து வெளியேறினான். அந்த வேளையிலும் ஒரு சோதனை தொடர்ந்தது. எத்தனையோ முன்னேற்பாடாக இருந்தும் கோட்டையின் மீது காவல் காக்கும் 'ஸெண்ட்ரி' வான்டெர் சுரங்கத்திலிருந்து வெளிப்படும்போது பார்த்துவிட்டான். துப்பாக்கி ஊளையிட்டு அதிர்ந்தது. நல்ல வேளை திடசித்தம் கொண்ட வான்டெர் காவலாளியின் குறியிலிருந்து தப்பிவிட்டான். ஓட்டம்....ஓட்டம்... புயல் போலக் கண் மண் தெரியாமல் ஓடினான். விடுதலைக்கு ஏங்கும் ஒருவனுக்குத்தான் ஓட்டத்தில் அத்தகைய வேகம் பிறக்கும். வான்டெர் பிடிபடவில்லை. தப்பிவிட்டான். ஐரோப்பாவிலிருந்து கடல் தாண்டிப்போய் லண்டனில் அகதியாக வாழ்க்கையை ஆரம்பித்தான். மதுபானம் விற்கும் வணிகனாகப் புது வாழ்க்கையைத் தொடங்கினான் வான்டெர். வான்டெரின் விடா முயற்சியையும் மன வலிமையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.







சித்திரம்: செல்லம்
தீபாவளிக்கு வாணம் வெடிகள் வாங்கவே கிளம்பி இருந்தாள் அந்தச் சீமான் வீட்டுச் செல்லப்பெண்
பயப்படாதே, அது வெறும் பொம்மை. அழகுக்காக வைச்சிருக்காங்க.
தீபாவளி பட்டாசு வாணம் வெடிகள் விற்கப்படும்
இது ஒரு ஸ்பெஷல் மத்தாப்பு பாப்பா. இதோ பார்...
இந்த நெருப்புப் பெட்டி யெல்லாம் கலர் கலரா எரியும் போலிருக்கே! சின்னதாக் கொளுத்திப் பார்த்தா என்ன?
மந்துவின் ஆராய்ச்சி வாணக் கடையை வாண வெடிக்கைக் களமாக்கி விடுகிறது.
அதோ, அங்கே நடக்கும் கலாட்டாவுக்குக் காரணம் நம்ப மந்துவாத்தான் இருக்கும். அதோ, அது போன கார் கூட இருக்கு...
வா...
ஐயையா! ஐயையா! என்னமாப் பூப்பூவாச் சொரியுது? அடேங்கப்பா... என்ன வெளிச்சம்... டப் டபார்... படபடார்...!
ஐயையோ! அதைக் கீழே போட்டுட்டு வா... ஓடியா, ஓடியா... நாம் போயிடலாம்.
சீக்கிரம், சீக்கிரம்! டிரைவர், காரை எடு.
இதென்னடா வம்பாப் போச்சு இந்தப் பொண்ணோட, வாணங்களெல்லாம் எத்தனை ஜோரா இருந்தது, அதைப் பார்க்க விடாம இப்படி...
கார் கிளம்பு முன் நந்துவும் சந்துவும் அதன் டிக்கியில் தொத்திக் கொள்ளுகின்றனர்.
ம்... சீக்கிரம், நல்ல வேளை, கார் கிளம்பு முன் தொத்திக் கொண்டோமே.


அந்தப் பெண்ணுக்கு அவர்கள் மங்குவின் எஜமானர்கள் என்று தெரியாது. தன்னிடமிருந்து குரங்கைப் பறிக்க வருபவர்களாக எண்ணி அவர்களை விரட்ட ஒரு வெடியைக் கொளுத்தி அவர்கள் மீது போட முயலுகிறாள்.
வேண்டாம், வேண்டாம். அவங்க என் ஆட்கள். அவங்க மேலே இதைப் போடாதே.
மங்கு பெண்ணின் கையைப் பிடித்து இழுக்கவே வெடி காருக்குள்ளேயே வெடித்துவிடுகிறது.
ஐயையோ! வெடியை டிரைவர் மேலே போட்டுட்டயே.
டிரைவரின் நிதானம் தவற, கார் தறிகெட்டு ஓட, நந்துவும் சுந்துவும் தூக்கி எறியப் படுகின்றனர்.
...கார் காம்பவுண்டுச் சுவரில் மோதி விபத்துக்குள்ளாகிறது. அந்தப் பெண் மங்குவை இழுத்துக்கொண்டு பங்களாவுக்குள் ஓடுகிறாள்.
ஓடியா, ஓடியா! உன்னாலே எவ்வளவு குளறுபடிகள்! ஆனாலும் உன்னை எனக்குப் பிடிச்சுப் போச்சு. நான் உன்னை விட மாட்டேன்.
தீபாவளி இரவு, வாணங்கள் சீறிச் சிரிக்கின்றன. நந்துவும் சுந்துவும் உடலில் கட்டுக்களுடன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்தபடி...
மங்குப் பயலே! பணக்காரப் பெண்ணோடு சேர்ந்துக் கட்டுக் கொட்ட மடிக்கிறியா? இரு... இரு, உன்னைப் பேசிக்கிறேன்.
அதே சமயம் பங்களாவில் மங்கு வாணங்களையும், வெடிகளையும் வண்டி வண்டியாகக் கொளுத்திக் குதூகலப்படுகிறது.
பட் பட் படாபட்.. படார் பட்! பலே பலே...புஸ்...ஸ்... எத்தனை விதமான வாணங்கள், என்னமா வெளிச்சம்? ஒவ்வொரு வெடியும் என்னமாச் சத்தம் போடுது. தினமுமே தீபாவளியா இருக்கப்படாதா?
தொடரும்

கூடைப் பந்தாட்டத்தின் கதை.....



விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு கொண்ட அமெரிக்க வாலிபர்களும், நடுத்தர வயதினரும் விளையாடிக்கொண்டிருந்த காலம் அது. எப்பொழுது பார்த்தாலும் உடற்பயிற்சி, கம்பிமேல் ஏறி இறங்கும் விளையாட்டுத்தானு என்று சிலருக்கு வெறுப்பு. வெட்ட வெளியிலே விளையாடி மகிழ்கிற கால் பந்தாட்டத்தையும் (*Football*), களப்பந்தாட்டத்தையும் (*Baseball*) இயற்கை ஆட முடியாமல் தடை செய்கிறது. தடுப்புச் சுவர்களும், மேற்கூரையும் உள்ள விளையாட்டுக் கூடங்களில் வெறும் உடற் பயிற்சி மட்டும் தான். பழையவை புளித்துப் போயின. புதிய ஆட்டம் வராதா, இன்பத்தைத் தராதா என்று அவர்கள் யோசித்துக் கொண்டும், பேசிக் கொண்டுமிருக்கிற நேரத்தில்தான் டாக்டர் நெய்சுமித் என்பவர் புதிய ஆட்டத்துக்கான மும்முரமான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.


'புதிய விளையாட்டு' ஒன்றைக் கண்டுபிடிப்பது என்ருல், சாதாரணக் காரியமா? ''உள்துறை விளையாட்டுக் கூடம் (*Gymnasium*) அமைக்க வேண்டும். அது கால் பந்தாட்டத்துக்குத் தேவையான முழுப் பரப்பையும் மூடி மறைக்கின்ற அளவுக்கு இருக்க வேண்டும். அதே சமயத்தில் இரவிலும், மின்விளக்கொளியிலும் மக்கள் விரும்பி ஆட வேண்டும். அப்படி ஆடும்போது ஆடுவோருக்குப் புதுத் தெம்பையும், புத்துணர்ச்சியையும் ஊட்ட வேண்டும். இவ்வாறு கருத்தாழம் நிறைந்த கற்பனையுடன், கட்டுப்பாடும் அற்புத அமைப்பும் மிக்க ஒரு புதிய ஆட்டத்தைக் கண்டுபிடிக்கத் தம் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டு இருந்தார் அவர். விளையாட்டுத் துறையில்தாம் பெற்றிருந்த அனுபவங்களையெல்லாம் மனக் கண் முன் நிறுத்தி முயற்சி செய்தார். பழைய விளையாட்டுக்களில் ஏதாவது ஒன்றைப் புதுப்பித்து விளையாட வைக்கலாமே என்று அவர் எண்ணியது ஈடேறவில்லை.

பழைய ஆட்டங்களைப் புதுப்பிக்கத் தான் முடியவில்லை. அந்த ஆட்டங்களின் அடிப்படை நுணுக்கங்களை ஆராய்ந்து தான் பார்க்கலாமே என்ற எண்ணம் தோன்றியதும் தாம் கண்டு பிடிக்க வேண்டிய புது ஆட்டத்துக்கும், ஒரு பந்தும், ஓர் இலக்கும் தேவை என்பதை எண்ணி, உறுதி செய்து கொண்டார். அந்த இலக்கை அமைக்கத்தான் முதலில் ஆராய்ச்சி செய்தார். கால்பந்தாட்டத்தின் இலக்கு இரு கம்பங்களுக்கு

இடையே உள்ளது. அந்த இலக்கை நோக்கிப் பந்தைச் செலுத்த அதிக வலிமையும் உறுதியும் வேண்டும். ஆனால் தனது கண்டு பிடிப்பு வலிமையற்றதாகவும், எளியதாகவும், அதே சமயம் நுட்பம் வாய்ந்ததாகவும், இனிதாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். அதற்கான இலக்கு எப்படி இருந்தால் நல்லது என்று ஆராய்ந்த பிறகு, ஒரு கட்டட மேற்பார்வையாளரை அணுகி, ஒரு மரப் பெட்டியைக் கேட்டார். அவரோ பெட்டிக்குப் பதிலாகக் கூடையைக் கொண்டு வந்து கொடுத்தார். இலக்குக் கிடைத்தது. ஆனால் பந்து ? இதற்கு அதிக இடம் கொடுக்காமல் எல்லோரும் அறிந்த கால் பந்தே இதற்கு உரியதாக இருக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தார். இப்பொழுது பந்தும் இலக்கும் வந்துவிட்டது. ஆடுகின்ற ஆட்டத்தின் நோக்கம் ?

தலைக்கு மேலே பொருத்தப்பட்டிருக்கும் கூடைக்குள்ளே பந்தைத் தூக்கிப் போட வேண்டும். புதிய ஆட்டம் பிறந்து விட்டது என்று கேள்விப்பட்ட உடனேயே விளையாட்டுச் சங்கத்தினர் அனைவரும் பூரித்துப் போயினர். அங்கத்தினர்கள் ஆடுங்களத்தில் கூடினர். ஆடுங்களம் எப்படி அமைந்தது தெரியுமா ? பத்தடி உயரத்தில் சுவரில் ஆணியால் பொருத்தப்பெற்றிருந்தது கூடை. உடற்பயிற்சி செய்யும் உள் துறைக்கூடத்திலேயே எதிரும் புதிருமாக இரண்டு கூடைகளும், மேலே சொன்ன அளவில் பொருத்தப்பட்டன. இனி ஆட்டம் தொடங்க வேண்டியது தான்.

ஆனால் இந்த ஆட்டத்துக்கு என்ன பெயர் கொடுப்பது ? இலக்குக் கூடையாகவும், வீசப்படும் பொருள் பந்தாகவும் இருந்ததால் நெய்சுமித் அதற்குக் கூடைப் பந்து (Basket Ball) என்று பெயரிட்டார். ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டக்காரர்களின் உற்சாகம் கரை புரண்டோடியது. முதலில் அவர்களுக்குக் கூடைக்குள்ளே பந்தைப் போடும் அளவுக்குக் குறி கிடைக்கவில்லை. அதனால் சிலர் குழம்பிப் போயினர். பல முறைக்கு ஒரு முறையே கூடைக்குள் பந்தைப் போட்டனர். போட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். போட்டவரை ஆச்சரியத்தோடும் மரியாதையோடும் பார்த்தனர். நாட்கள் ஓடின. குறி பார்த்துக் கூடைக்குள் எறியும் அளவுக்கு விளையாட்டு அங்கத்தினர் பயிற்சியும் பக்குவமும் பெற்றனர். இந்தக் கட்டத்தில் ஒரு புதுக் குழப்பம் !



பத்தடி உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கூடைக்குள் பந்து விழுந்தால் வெளியே எடுக்க வேண்டுமே! யாருக்கும் எட்டாதே? ஆகவே, அந்தப் பந்தை எடுத்து வெளியில் போட, ஏணி ஒன்று தேவைப்பட்டது. அடிக்கடி பந்து கூடைக்குள் விழத் தொடங்கியவுடன் ஏணியும் அடிக்கடி தேவைப்பட்டது. அது ஆட்டத்தின் வேகத்தைக் குறைத்ததோடு, ஆடுவோரின் ஆர்வத்தையும் கெடுத்தது. நேரமோ வீணாகியது. நெஞ்சமோ புண்ணாகியது. நெய்சுமித் அந்தக் காட்சியைக் கண்டு இன்னும் ஓர் அற்புதமான ஏற்பாட்டினைச் செய்தார். குழப்பத்துக்குக் காரணம் பந்து கூடைக்குள் தேங்குவது தான், அதைத் தேங்காமல், கூடையின் அடிப் பாகத்தைக் கழற்றி நீக்கிவிட்டார்! உள்ளே விழுந்த பந்து உடனே வெளியே விழும் அல்லவா! ஆட்டக்காரர்கள் மகிழ்ச்சியில் நெய்சுமித்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினார்கள். மக்கள் மன்றத்திலே கூடைப் பந்தாட்டம் நடைபோடத் தொடங்கியது. இதையெல்லாம் கண்ட ஒரு சில பொறுமை மிக்கவர்கள் கூடைப் பந்தாட்டக்காரர்களைக் கண்டு குறை பேசி வந்தனர்,

கூட்டம் கூட்டமாக வந்து வார்த்தைகளில் சாடினர். கூடைப் பந்தாடுவோரையெல்லாம் 'அலி' என்றும், ஆண்மை இல்லாதவர்கள் என்றும் கூறினர். ஏனெனில், புதிய ஆட்டம் தொடங்கியவுடன் பழைய ஆட்டங்களைக் காண வரும் ரசிகர்களும் ஆடுவோரும் குறைந்தனர். இதனால் பழைய ஆட்டங்களில் விருப்பம் உள்ளவர்கள் வம்பு கொடுத்தும் புதிய ஆட்டத்தைக் கெடுக்கவும் முனைந்தனர். 1891ஆம் ஆண்டு உருவெடுத்த இந்த ஆட்டம் 1892ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள ஸ்பிரிங்பீல்டு கல்லூரியில் பாடமாக அமையும் பேறு பெற்றது. ஆனால் இவ்வளவு வளர்ச்சியிலும், கூடைப்பந்து ஆடுவதற்கென்று, ஓர் அமைப்பான இடமும் எல்லையும் சரியாக நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. இதனை உணர்ந்த நெய்சுமித் அவர்கள், ஆடுகின்ற தளத்தின் நீளம் 85 அடியென்றும், அகலம் 46 அடியென்றும் வரையறுத்தார்..... முதலில் ஒரு குழுவுக்கு ஒன்பது பேர் என இரு குழுவில் 18 ஆட்டக்காரர்கள் இருந்தனர். அத்தனை பேரும் அச்சிறிய களத்துக்குள் பந்துடன் ஓடி ஆட முடியவில்லை. இதனால் ஒரு குழுவுக்கு ஏழு பேர்கள் எனக் குறைந்தது. அப்பொழுதும் சரியாக ஆட முடியவில்லை. பின்பு ஐந்து ஆட்டக்காரர்களே ஒரு குழுவுக்குப் போதும் என மாற்றினர். அந்த ஐந்து எண்ணிக்கையே இன்று வரையில் மாறாமல் நிலைத்துவிட்டது.

கூடைப் பந்துக்கு என்று நெய்சுமித் அவர்கள் முதலில் தோற்றுவித்த விதிமுறைகளில் நான்கு விதிகள் இன்று வரையில் மாறவில்லை. பந்தை வைத்திருக்கும் ஓர் ஆட்டக்காரர் கையில் பந்தை வைத்தபடியே, நடந்தோ, ஓடியோ முன்னேறிச் சென்று பந்தை கூடையுள் எறியக் கூடாது. பந்து வைத்திருப்பவரிடமிருந்து பந்தைப் பெற விரும்பும் மற்றோர் எதிர்க் குழு ஆட்டக்காரர் அவர் மேல் எக்காரணத்தைக் கொண்டும் இடிக்கவோ; மோதவோ கூடாது. ஆட்டக்காரர்களுக்கு எட்டாத உயரத்தில்தான் இலக்கு எப்பொழுதும் பொருத்தப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஆட்டக்காரர்களுக்கு இடையே உடல் தொடர்பு ஏற்படக் கூடாது.


ஆட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய முக்கியமான சில விதிகளை அமைத்தவர் ஆடுகின்ற நேரத்தையும்கூடக் குறித்து வைத்தார்.

எவ்வளவோ சீர்திருத்தங்களைப் புகுத்தியும் அதன் தாயகமான அமெரிக்காவில் மட்டும் இந்த ஆட்டம் செல்வாக்குப் பெறவில்லை. ஆனால் அகில உலகமெங்கும் வெற்றிகரமாகப் பவனி வந்தது. ஒலிம்பிக் பந்தயங்களில் ஒன்றாகப் போட்டியிடுகின்ற விளையாட்டாக மதிக்கப்பெறும் அளவுக்குச் செழித்து விட்டது, கூடைப் பந்தாட்டம். கல்கத்தாவின் வழியாக நம் நாட்டினுள் புகுந்த இந்த ஆட்டம் எல்லா இடங்களிலும் இனிதாக ஆடப்பட்டாலும், மக்களின் மனத்தைக் கவரவில்லை.

1932ஆம் ஆண்டுக்குப் பின்னரே ஓரளவுக்கு இந்தியாவில் வளரும் வாய்ப்பினைப் பெற்றது. இந்த ஆட்டம் இன்று இந்தியாவில் உள்ள பட்டிதொட்டிகளில் எல்லாம் கூடைப் பந்தாட்டம் பரவி விட்டது. சாதாரண ஆட்டமாக, வலிமையை அதிகம் எதிர்பார்க்காத, ஒரு சிலரின் தேவைக்காகத் தோன்றிய இந்தக் கூடைப் பந்தாட்டம் நல்ல நெஞ்சுரமும், உடலாற்றலும், உடல் கட்டுப்பாடும் உள்ளவர்களால் தான் உருப்படியாக ஆட முடியும் என்ற அளவுக்கு வளர்ந்து விட்டது. ஒரு சிலரது உள்ளத்தைக் கவர வந்த ஆட்டம் இன்று உலகத்தையே கவர்ந்து கோலோச்சுகிறது.

எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்

PHILIPS

பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

வழித்துணை

முருகன் ஓர் ஏழைச் சிறுவன். அவனுடைய தந்தை ஐந்து வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். அதற்குப் பிறகு ஏற்பட்ட குடும்பக் கஷ்டம் காரணமாக அவனால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியவில்லை.

முருகனின் தாயார் மரகதம் பலகாரங்கள் செய்து கொடுப்பாள். அவற்றை இரண்டு மைல் தூரத்தில் இருந்த பழவனூருக்கு எடுத்துச் சென்று விற்றுவிட்டு வருவான். தினமும் இரண்டு அல்லது மூன்று ரூபாய் லாபமாகக் கிடைத்து வந்தது. அவன் தின்பண்டங்களை விற்று அதில் வரும் லாபத்தில்தான் குடும்பமே நடந்து கொண்டிருந்தது.

முருகனுக்கு வயது பதினைந்துதான் ஆகிறது என்றாலும், குடும்ப நிலைமையை நன்கு உணர்ந்திருந்தான்.

மகன் பொறுப்புணர்ச்சியோடு இருந்து வருவதைப் பார்க்கப் பார்க்கத் தாய்க்கு மிகவும் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருக்கும்.

ஒரு நாள் முருகன் தான் கொண்டு சென்ற பலகாரங்கள் அனைத்தும் சீக்கிரத்திலேயே விற்றுப் போய்விட்டதால், அந்த மன நிறைவோடு நேரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்போது எதிர்த் திசையில் ஒரு பெரியவர் வயது முதிர்ச்சியின் காரணமாகவோ, இல்லை உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாலோ, தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தார்.

முருகனுக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. விரைந்து அவரை நெருங்கியவன், ''ஐயா! நீங்கள் எங்கு செல்ல வேண்டும்? உடல்நிலை சரியில்லையா?'' என்று மிகுந்த அநுதாபத்தோடு கேட்டான்.

''ஆமாம், தம்பி! தலையைச் சுற்றுகிறது. மயக்கம் வரும்போல் இருக்கிறது. நான் மருதூர் செல்ல வேண்டும்'' என்றார் அந்தப் பெரியவர்.

''நீங்கள் கொஞ்ச நேரம் இந்த மரத்து நிழலில் இளைப்பாறுங்கள். நான் சென்று ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்'' என்று சொல்லி, அந்தப் பெரியவரைச் சாலையோரம் இருந்த ஒரு மரத்தின் நிழலில் உட்காரச் செய்துவிட்டு ஓடினான் முருகன்.

சிறிது தூரத்தில் ஒரு சிறிய ஹோட்டல் இருந்தது. அங்கு சென்று உடனே திரும்பியவன், ''ஐயா! இதைப் பருகுங்கள். சற்றுத் தெம்பாக இருக்கும்'' என்று கூறி அவரிடம் காப்பிக் குவளையை நீட்டினான்.

அந்த நேரத்தில் அது அவருக்கு அமுதமாக இருந்தது. முருகனின் கனிவான பேச்சும், தன்னிடம் அவன் காட்டிய பரிவும் கண்டு அவருடைய கண்கள் கலங்கின.

அவனிடம் கேள்விகள் கேட்டு அவனைப் பற்றி நன்கு அறிந்து கொண்டார், அந்தப் பெரியவர்.

சற்றைக்கெல்லாம் அவர் எழுந்தார்.

''நான் புறப்படலாமா தம்பி?''

''மருதூர் இன்னும் ஒரு மைல் தொலைவு இருக்கிறதே ஐயா? நானும் உங்களுடன் வருகிறேன். உங்களை ஊரில் விட்டு விட்டுத் திரும்புகிறேன். என்று சொன்ன முருகன், அவர் தடுத்தும் கேளாமல் அவரிடமிருந்த மூட்டையையும் வாங்கிக்கொண்டு அவருடன் புறப்பட்டான். ஊர் போய்ச் சேருவதற்குள் அவரைப் பற்றி அவனும் அறிந்து கொண்டான்.

அந்தப் பெரியவரின் பெயர் முத்துக் கண்ணப்பர். உற்றார் உறவினர் என்று எவருமே இல்லாதவர். எஞ்சிய நாட்களைத் தொல்லையின்றிக் கழிப்பதற்காக



வினோதானந்த்

மருதூரில்ஒரு சிறிய பெட்டிக் கடையை வைத்து நடத்திக் கொண்டிருந்தார்.

சரக்குகள் பெரும்பாலும் தீர்ந்து விட்டதால், இன்று அவர் பழவனூர் புறப்பட்ட போது, அந்தப் பாதையில் போய் வந்து கொண்டிருந்த ஒரே பஸ்ஸும் பழுதுபட்டிருந்ததன் காரணமாக வரவில்லை.

உடலிலே தெம்பு இருக்கிறதோ இல்லையோ மனத்தெம்பு இருந்தது. நடந்து செல்வோம் என்று அவர் புறப்பட்டார். மற்ற சமயமாக இருந்திருந்தால் அவருக்கு எதுவும் நேர்ந்திருக்காது. கடந்த இரண்டு நாட்களாக அவருடைய உடல் நிலை சரியாக இல்லை. எனவே, தலைச் சுற்றலும், மயக்கமும் அவரைத் தடுமாறச் செய்து விட்டன.

முருகன் அவர் வாங்கிக்வந்த பொருள்களைக் கடையில் வைத்தான்.

''இதை வைத்துக் கொள், தம்பி...'' என்று கூறிப் பெரியவர் கொடுத்த ஒரு ரூபாய்த் தாளை அவன் தொடவில்லை.

''ஐயா! இதெல்லாம் வேண்டாம். போய் வருகிறேன்...'' என்று சொல்லி விட்டுச் சிட்டாய்ப் பறந்து போனான்.

அவனையே வியப்போடு பார்த்தவாறு நின்றார், முத்துக் கண்ணப்பர்.

அதற்குப் பிறகு அந்த நிகழ்ச்சியை முருகன் மறந்து விட்டான்.

ஐந்தாறு மாதங்கள் சென்றபின், ஒரு நாள் முருகனின் வீடு தேடி யாரோ வந்தார்கள்.

''தம்பி! உன்னை முத்துக்கண்ணப்பர் பார்க்க வேண்டுமாம். உடனே வரச் சொல்கிறார்...'' என்று வந்தவர் கூறியதும், ''நான் சீக்கிரம் போய்விட்டுத் திரும்பி விடுகிறேன்'' என்று தாயிடம் சொல்லிக் கொண்டு அவன் புறப்பட்டான்.

வந்திருந்தவர் ஓட்டிக் கொண்டு வந்திருந்த வில் வண்டியில் அவன் ஏறிக் கொண்டதும், புழுதியைக் கிளப்பிக் கொண்டு வண்டி கிளம்பியது.

மருதூரை நெருங்கியதும் கடையை ஒட்டியிருந்த முத்துக் கண்ணப்பரின் குடிசையின் முன்னால் ஒரு பெரிய கூட்டமே கூடியிருந்தது. அவன் அங்கு போய்ச் சேர்ந்ததும் கிடைத்த முதல் தகவல்:

முத்துக்கண்ணப்பர் இறந்துவிட்டார்!

முருகனுக்குத் துயரம் தாங்கவில்லை.

முருகனைப் பார்க்க வேண்டும் என்று முத்துக்கண்ணப்பர் மிகவும் துடித்தாராம். அவன் வரும்வரையில் அவர் உயிர் காத்திருக்கவில்லையே!


''தம்பி!....''

முருகனின் தோளைத் தொட்டுத் தம் பக்கம் திருப்பினார் ஒருவர். அழுது சிவந்த கண்களோடு முருகன் அந்த மனிதரைப் பார்த்தான்.

''தம்பி! பெரியவர் இதுவரையிலும் தனிமரமாகத்தான் வாழ்ந்து வந்தார். மூன்று நாட்களாக அவருக்கு உன் நினைவுதான். தாம் சாகப் போகிறோம். என்று அவருக்குத் தெரிந்து விட்டது. உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் சொன்னார். அவருக்குப் பிறகு இந்தக் கடையை நடத்த அவருடைய வாரிசு யாருமில்லை. அதனால், கடையை உனக்கு அன்பளிப்பாகக் கொடுக்க முடிவு செய்தார். இனிமேல் இந்தக் கடையை நீதான் நடத்தி வர வேண்டும். அவருடைய கடைசி ஆசை இது...'' என்றார் அவர்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு வந்த முருகன், நன்றி பொங்க முத்துக் கண்ணப்பரின் உடலைப் பார்த்தான். முக்கிய கடமை ஒன்றை நிறைவேற்றி விட்ட நிறைவும், வற்றாத புன்னகையும் அவருடைய முகத்தில் ஒளிச் சுடராய்ப் பிரதிபலித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.





மாய மோதிரம்

வாண்டு மாமா




கானகத்தையே நம்பி வாழ்பவன் கங்காளன் என்ற விறகு வெட்டி. அவனது அழகு மகள்தான் பூங்குழலி. கங்காளன் வெறும் விறகுகளை மட்டும் வெட்டிப் பிழைப்பு நடத்துபவனல்ல. கானகத்துச் செல்வங்களையெல்லாம் நகரத்து மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து வாழ்ந்து வந்தான். மூலிகைகள் கொம்புத் தேன், கஸ்தூரி, புலித்தோல், மான் தோல், பல்வேறு பழங்கள் இப்படியெல்லாம் அரிய பொருள்களை அரண்மனை வாசிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் கிடைக்கும்படி செய்வான் கங்காளன். ஆனால் அவன் வாழ்ந்ததென்னவோ கானகத்தின் நடுவிலே. கட்டுமஸ்தான உடம்பும், கலங்காத நெஞ்சமும் கொண்டவன் கங்காளன். மனைவியை இழந்த அவன் பூங்குழலியே தன் உலகமாக எண்ணி வாழ்ந்து வந்தான்.

பயமென்பதையே அறியாதவளாக வாழ்ந்து வந்தாள் பூங்குழலி. கங்காளன் பல நாட்கள் காடு, மலை, குகை இப்படிச் சுற்றிக் கொண்டிருப்பான். பூங்குழலி சின்னக் குழந்தையிலிருந்தே தனிமையில் வாழ்ந்து பழகிக்கொண்டு விட்டாள். கானகத்தின் ஒவ்வொரு மூலையும் அவளுக்குத் தெரியும். எங்கும் பயமின்றிச் சுற்றித் திரிவாள். அப்படி ஒரு தடவை தன் ஆலமரத்து வீட்டிலிருந்து வெகு தூரம் பட்டுப் பூச்சியாகப் பறந்து வந்தபோதுதான் சத்தியசீலனின் பார்வையிலே பட்டாள். அவளைப் போலவே கானகத்துக் காளையாக வாழ்ந்து வந்த சத்தியன் பூங்குழலியின் எழிலிலே தன்னை இழந்தான். அரச குமாரனைப் போன்ற அழகனும் ஆனால் எளிய தோற்றமும் கொண்ட சத்தியனின் கம்பீரத்திலே பூங்குழலியும் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள். அன்று இருவரும் தங்களைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளாமலேயே பிரிந்தார்கள்.

7

எண்ணமெல்லாம் அவளேயாகத் தன் இருப்பிடம் திரும்பிய சத்தியனுக்கு அங்கே ஓர் அதிர்ச்சி தரும் செய்தி காத்திருந்தது. அவன் வீட்டுக் கதவிலே அந்தச் செய்தி குத்துவாள் கொண்டு நிறுத்தப்பட்டிருந்தது. பராக்கிரமரின் செய்திதான் அது. மகனைக் காண வந்தவர் அவன் இல்லாமல் போகவே அவனுக்கு அறிவிக்க வேண்டிய விஷயத்தை மரவுரியிலே பச்சிலைச் சாறு கொண்டு எழுதி அதைக் கதவிலே தம் குத்துவாளால் குத்திப் பதித்துவிட்டுப் போயிருந்தார்.

''மகனே! நான் உன்னிடம் விடை பெற்றுப் போக வந்தேன். ஆனால் உன்னைச் சந்திக்க முடியவில்லை. இந்த உலகத்திலே நீ சாதிக்க வேண்டிய செயல்கள் பல உள்ளன. இனி நீ சுதந்திரமாகச் செயல்படலாம். உலகின் பல பகுதிகளுக்கும் போய்ப் பல விஷயங்களை அறிந்து கொண்டு திரும்பி வா. அதன் பிறகு உனக்கு ஒரு கடமை காத்திருக்கிறது. அதைச் செய்வதற்காகவே நான் கானகத்துக் காளையாக உன்னை வளர்த்திருக்கிறேன். உலக அனுபவம் பெற்றுத் திரும்பும் உன்னை வரவேற்கக் காத்திருப்பேன். அதுவரை என்னை நீ காண முடியாது. உனக்கு உன் பிரயாணத்தில் ஏதாவது இக்கட்டான நிலை ஏற்படுமானால் அப்போது உனக்கு உதவியாக ஒரு மகத்தான வாளை அனுப்பி வைப்பேன். சென்று வா மகனே, உலகை வென்று வா!'' என்று மகனை



வாழ்த்தி விடைபெற்றுக் கொண்டிருந்தார் பராக்கிரமர் அந்தக் கடிதத்திலே.

இந்தச் செய்தி சத்தியனுக்கு இனம் தெரியாத வேதனையை ஏற்படுத்தியது. இனி தன் தந்தையை நீண்ட நாட்களுக்குக் காண முடியாது என்ற நினைப்பு நெஞ்சைத் திருகியது. ஆனால் அதே சமயத்தில் பூங்குழலியின் நினைவு அதற்கு இதமாக இருந்தது. அன்று இரவு அவனுக்கு உறக்கம் வரவே இல்லை. காலையில் எழுந்தவன் பூங்குழலியைத் தேடி ஓடினான். முதல் நாள் அவளை எங்கு சந்தித்தானோ அதே இடத்துக்குப் போனான். ஆனால் அவளை அங்கு காணவில்லை. காத்திருந்தான், எப்படியும் அந்த அழகி வருவாள் என்ற நம்பிக்கையோடு. விநாடிகள் வருஷங்களாகத் தோன்றின சத்தியனுக்கு. அவள் வரவில்லை. அவள் நினைவு, அந்தச் சிரிப்பு அந்த எழில் அவனைச் சித்திரவதை செய்யலாயின. காத்துக் காத்துக் களைப்புற்றுப் போனான்.

''எங்கிருந்தாலும் அவளைக் கண்டு பிடித்தே தீருவேன்'' என்ற உறுதியோடு கிளம்பினான். 'என்னை உலகமெல்லாம் சுற்றி வருமாறு தந்தை ஆணையிட்டிருப்பது இதற்காகத்தானோ?' என்று நினைத்தபடியே தனது நீண்ட நெடும் பயணத்தைத் தொடங்கினான் சத்தியசீலன்.

இவனைப் போலவே இவன் நினைவாகவேதான் இருந்தாள் அவளும். ஆனால் மறுநாள் அவளால் தன் மனத்தில் இடம் கொண்ட மன்மதனைக் காண வரமுடியவில்லை. கங்காளன் ஏதோ காரியத்தை அவளிடம் ஒப்படைத்து விட்டான். அதை முடிக்காமல் அவளால் கிளம்ப முடியாதே. மறுநாள் அவள் ஓடோடி வந்தாள், அந்த ஒப்பற்ற அழகனைக் காண. ஆனால் அவனோ அவளைத் தேடிக் கொண்டு தேச சஞ்சாரத்துக்குக் கிளம்பி விட்டான். பூங்குழலி கனத்த இதயத்தோடு தன் கானகக் குடிசைக்குத் திரும்பினாள். இவர்களைச் சந்திக்க வைத்த விதி இப்படிப் பிரித்ததும் ஒரு காரணத்துக்காகத்தான்.

தான் ஒரு மன்னரின் மகன் என்ற உண்மை தெரியாமலேயே சத்தியசீலன் தேச சஞ்சாரம் செய்தான். வருடங்கள் உருண்டன. அவனிடம் ஆண்மையும் அழகும் அனுபவமும் வீரமும் கூடின. முன்னை விட உருவத்திலே, எண்ணத்திலே, செயல்களிலே எவ்வளவோ மாறுபட்டவனாக விளங்கினான் சத்தியன். ஆனாலும் பூங்குழலியின் நினைவு மட்டும் நீங்கவேயில்லை. எத்தனையோ நாடுகளையும் காடுகளையும் கண்டான், அவன். ஆனால், அன்று கண்ட அந்த அழகியை எங்கும் காண முடியவில்லை. அந்த ஏக்கம் அவன் இதயத்தின் ஒரு மூலையைக் கடித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் சத்தியன் ஒரு கானகத்தின் வழியே வந்து கொண்டிருந்தான். வெகு தூரத்திலே விநோதமானதொரு வீடு தெரிந்தது. அவ்வீட்டின் நடுவிலே ஒரு பெரிய ஆல விருட்சம் பிளந்து கொண்டு கிளம்பினாற்போல விரவிப் பரவி வளர்ந்திருந்தது. வெகு தூரத்துக்கு வெகு தூரம் வேறு வீடுகளோ ஜன சஞ்சாரமோ இல்லாமல் அந்த வீடு தனித்து நின்றது. நீண்ட பிரயாணத்தினால் களைத்துப்போயிருந்த சத்தியன் அந்த வீட்டிலே தங்கி இளைப்பாறிச் செல்ல எண்ணி அதை நோக்கி நடக்கலானான். அது கங்காளனின் வீடு. எந்த அழகியைத் தேடி இத்தனை வருஷங்களாக அவன் அலைந்துகொண்



டிருக்கிறானே அவள் அந்த அதிசய ஆலமரத்து வீட்டில்தான் இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாது.

கானகத்தில் வழி நடந்து களைத்து வரும் பிரயாணிகளை உபசரிப்பதிலே உவகை அடைபவன் கங்காளன். சத்தியனை அவன் இரு கைகளை நீட்டி இன்முகம் காட்டி வரவேற்றான். அவனது உடனடித் தேவை என்ன என்பதை அறிந்த கங்காளன் புதியவனின் பசிக்குச் சுவைமிக்க உணவும், பருகப் பானமும் கொடுத்து மகிழ்ந்தான். பிறகு களைப்புத் தீரப் படுக்கையும் தயார் செய்து கொடுத்தவன், சத்தியனுக்குத் தூக்கம் வரும்வரை அவனோடு பேசிக் கொண்டிருந்தான். அவனுக்கு உணவு கொடுத்து உபசரிக்கும் பணியில் பூங்குழலியும் பங்கு கொண்டாள். ஆனால் இருவருமே ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளவில்லை. ஒரே ஒரு தடவை சந்தித்தது மட்டுமல்ல இதற்குக் காரணம். இந்த இடைக் காலத்தில் இருவருமே உருவில் வெகுவாக மாறிப் போயிருந்தார்கள்.

சத்தியன் தன்னைப் பற்றிக் கங்காளனிடம் கூறினான். அப்போது தான் சந்தித்த ஓர் அழகியைத் தேடி ஊர் ஊராக அலைந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டான். அவளைச் சந்தித்தது எங்கே, எப்படி என்பதை அவன் கூறிய போது கங்காளனின் முகத்தைச் சினம் கவ்வியது. தன் அருமை மகள் பூங்குழலி சில காலமாகப் பொலிவிழந்து உற்சாகம் குன்றி ஒடுங்கிப் போவதை எண்ணிக் கவலை கொண்டிருந்தான் கங்காளன். தன் தந்தையிடம் தான் அன்றொரு நாள் சந்தித்த ஆணழகனைப் பற்றியும் அவள் ஒரு நாள் குறிப்பிட்டிருந்தாள். அவள் சந்தித்தவன் இவன் தான் என்பதை அறிந்தபோது உல்லாசப் பறவையாக ஓடியாடித் திரிந்தவளை இந்த நிலைக்கு ஆளாக்கியவன் அவன்தான் என்பதை அறிந்ததும், கங்காளனின் நெஞ்சிலே கனல் மூண்டது. அவனிடம் வெறுப்பும் விரோதமும் வளர்ந்தன.

குபீரென்று எழுந்தான் கங்காளன், இடையிலிருந்த குத்துவாள் அவன் கரத்திலே பளபளத்தது.

''விருந்தாளியாக உன்னை ஏற்று உபசரித்து விட்டபடியால் இன்னும் நீ உயிரோடிருக்கிறாய். இல்லாவிடில் இந்நேரம் இந்தக் கத்தி உன் ரத்தத்தை ருசி பார்த்திருக்கும். விருந்தோம்பல் என்ற பண்பை நாசமாக்க விரும்பவில்லை. இரவு தூங்கு. எழுந்ததும் உன்னைக் கவனிக்கிறபடி கவனிக்கிறேன்'' என்று கூறி அறையை விட்டு வெளியேறினான் கங்காளன்.

அப்போதுதான் சத்தியனுக்குப் பளீரென்று ஏதோ ஒரு மாயத் திரை விலகியது போல, கங்காளனோடு இருக்கும் இளம் பெண்தான் தன் இதயத்தில் இடம் கொண்ட காதலி பூங்குழலி என்பது புரிந்தது. அதே மாதிரி பூங்குழலிக்கும் விருந்தாளியாக வந்துள்ள வாலிபனேதான் தன் இதயம் கவர்ந்த இனியவன் என்பதை உணர்ந்து கொண்டபோது அவளும் திக்பிரமை அடைந்தாள். தந்தை கங்காளனுடைய குணம் அவளுக்குத் தெரியும். அவன் தான் ஒரு முடிவுக்கு வந்து விட்டால் பிறகு அதை மாற்றிக்கொள்ளவே மாட்டான். ஒரு வாலிபனின் அழகிலே மயங்கி, அவன் நினைவாக ஏக்கம் கொண்டிருப்பதைத் தன் தந்தை விரும்பவில்லை என்பதையும் அவள் அறிவாள். ஆகவே மறுநாள் காலையில் என்ன விபரீதம் நிகழுமோ என்ற கவலை அவளை வாட்டலாயிற்று.



சத்தியனின் நிலையோ? தேடியலைந்த திரவியம் கிடைத்ததும் அதை அடைய முடியாமல் ஒரு விபரீதச் சூழல் உருவாகி விட்டதே என்று குமைந்தான். கங்காளனின் வீரமும், தோற்றமும், பேச்சும் சத்தியனின் நினைவிலே அச்சத்தை உண்டாக்குவதாக இருந்தன. உயிர் ஆசையால் ஏற்பட்ட அச்சமல்ல அது. அவனிடம் ஆயுதமில்லாவிட்டாலும் எந்த ஆபத்தையும் இரு கைகளாலேயே சமாளிக்க முடியும் அவனால். ஆனால் எதிரி அவன் காதலியின் தந்தையாக அல்லவா அமைந்து விட்டான்.

உறக்கமின்றி இருளிலே புரண்டு கொண்டிருந்தவனை ஒரு மென்கரம் மெல்லத் தொட்டது. துள்ளி எழுந்து அமர்ந்தவனை 'உஷ்' என்ற ஓசையினால் அடக்கியது அந்த உருவம். அவன் காதருகே கதகதப்பான மூச்சுக் காற்றோடு கிசுகிசுத்தது ஒரு குரல்.

''அன்பே, கவலைப்படாதீர்கள். உங்களைக் காணவே ஏங்கிக் கொண்டிருக்கிறேன். காலையில் என்ன நேருமோ என்று கலங்க வேண்டாம். தற்காப்புக்கு ஆயுதம் ஏதுமில்லையே என்ற கவலையும் வேண்டாம். உங்களுக்காக என் தந்தையை இழக்கத் துணிந்து விட்டேன். இந்த வீட்டில் ஓர் அற்புதமான வாள் இருக்கிறது. அதை நீங்கள் உங்களுடையதாக்கிக் கொள்ள முடியுமானால் நானும் உங்களுடையவளாகி விடுவேன்'' என்றது குரல். குரலுக்கு உரியவள் பூங்குழலிதான் என்பதைப் புரிந்துகொள்ளச் சத்தியனுக்கு அதிக நேரமாகவில்லை. இருளிலே பூங்குழலியின் பூப்போன்ற கரங்களை எடுத்துத் தன் கன்னங்களில் பதித்துக் கொண்டான். அவள் ஸ்பரிசமே அவன் உடலில் புதிய சக்தியை உண்டாக்கியது.

''அந்த வாள் எங்கே இருக்கிறது. அதைக் காட்டு பார்க்கலாம்'' என்றான் சத்தியன். உழைப்பால் உரமேறிய காதலனின் வலுவான கரம் பற்றி இருளிலே வழி காட்டிக் கொண்டு போனாள் பூங்குழலி.

ஓர் அறையில் கங்காளன் குறட்டை ஒலியை இருவரும் கேட்டனர். வீட்டின் நடுவே தூணாக இருந்த ஆல விருட்சத்தின் அடிமரத்திலே ஆழப் பதிந்த நிலையில் ஒரு வாள் குத்திட்டு நின்றது. சிறிய தீவட்டியின் ஒளியிலேயே அது தகதகத்தது.

''எத்தனையோ பலசாலிகளும் பராக்கிரமசாலிகளும் இந்த மரத்திலிருந்து இந்த வாளை உருவி எடுத்துத் தனதாக்கிக்கொள்ள முனைந்து தோற்றுப் போய்விட்டார்கள். யாராலுமே இந்த மரத்திலிருந்து இதைப் பிடுங்கி எடுக்க முடியவில்லை. இது யார் கையில் இருக்கிறதோ அவர்களை வெல்ல யாராலுமே முடியாதாம். அப்படியொரு சக்தி படைத்த வாளாம் இது. எவராலும் முடியாததை நீங்கள் சாதிக்க முடியுமானால் வெல்ல முடியாத பலசாலியான என் தந்தையை வென்று என்னையும் உங்கள் உடைமையாக்கிக் கொள்ளலாம்'' என்றாள் பூங்குழலி நாணத்தினால் சிவந்த அவள் முகம் தீவட்டியின் ஒளியிலே இன்னும் சிவப்பாகியது. ஒளிவீசும் அவள் விழிகளை உற்றுப் பார்த்தான் சத்தியன். உடலிலே மின்னலைப் பாய்ச்சியது அவள் பார்வை. கம்பீரமாகச் செருகி நின்ற வாள் 'என்னை உன்னுடையதாக்கிக் கொள்' என்று அழைப்பது போலிருந்தது. 'உன்னை மட்டுமல்ல இந்த அழகியையும் என் வாழ்வின் துணையாக்கிக் கொள்ளுவேன்' என்ற முடிவோடு வாளை மரத்திலிருந்து உருவி எடுக்க முற்பட்டான் சத்தியன். (தொடரும்)



பயமறியாத பாவை

.கௌசிகன்.


இளமையும் எழிலும் கொண்ட ஸ்ரீமதி கிரிம்வுட்டுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. இந்தியநாடு அவர்களுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. கணவர் கிரிம்வுட் ஆங்கில அரசாங்கத்தில் ஒரு நல்ல பதவியில் இருந்தார். திறமை மிக்கவர். ஆகவே பதவி உயர்வும் விரைவிலே கிடைத்தது. மணிப்பூரின் தலைநகரான இம்பாலில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏஜண்டாகப் பொறுப் பேற்றுப் போகும்படி அனுப்பப்பட்டார் இளைஞர் கிரிம்வுட். சமீபத்தில்தான் அவருக்குத் திருமணமாகி இருந்தது.

ஸ்ரீமதி கிரிம்வுட் அழகி மட்டுமல்ல, துணிச்சல் மிக்கவளும்கூட. சகிப்புத் தன்மையும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். ஆங்கில அரசாட்சியின் ஆரம்ப காலம் அது. மகாராஜாக்களும் மன்னர்களும் பிரிட்டிஷாரின் ஆதரவோடு ஆட்சி செய்து கொண்டிருந்த காலம். கல்கத்தாவிலிருந்து மணிப்பூருக்கு நானூறு மைல்கள். மலைப் பாதை. இருபுறமும் நெடிதுயர்ந்த மலைகள், ஆழமான பள்ளத்தாக்குகள். சக்கரம் வைத்த வாகனங்கள் போகக் கூடிய பாதையல்ல அது. கணவனும் மனைவியும் குதிரைகளில்தான் இம்பாலுக்குப் பிரயாணமானார்கள். இவர்களுடைய சாமான்களைச் சுமந்தபடி கூலிகள் நடந்து வந்தார்கள்.

ஸ்ரீமதி கிரிம்வுட் நன்றாகக் குதிரைச் சவாரி செய்வாள். சாகசம் மிக்க இந்த மலைப் பாதைப் பிரயாணத்தை மிகவும் விரும்பி ரசித்தாள் அவள். பிரயாணத்தின் முடிவில் புதிய நாட்டில் புதிய வீட்டில் புது வாழ்க்கை தொடங்கப்போகிறோம் என்ற குதூகலம் வேறு. இம்பாலில் இவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வீடு பகட்டானதாக இல்லாவிடினும் அழகானது, அடக்கமானது. மணிப்பூர் நாகரிகப்படி கூரை, ஓலையால் வேயப்பட்டிருந்தது. சுற்றிலும் சிங்காரப் பூந்தோட்டம். வண்ண வண்ணப் பூக்கள் வரிசை கட்டிக் கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. மெத்தென்ற புல்வெளிகளில் நெடிதுயர்ந்த மரங்களின் நிழல் படிந்து குளுகுளுப்பாக்கிக் கொண்டிருந்தது.

இளம் கிரிம்வுட் தம்பதியருக்கு ஆரம்பத்தில் இம்பாலில் வாழ்க்கை இனிக்க இனிக்கத்தான் இருந்தது. நாட்டின் பல பகுதிகளையும் குதிரைமீதேறிச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தார்கள். வேட்டையாடினார்கள், தோட்டத்தில் புதிய மலர்ப் பாத்திகளை உருவாக்கினார்கள்.

அரண்மனை வாழ்க்கை அத்தனை அமைதி நிறைந்ததில்லை என்று அவர்களுக்குத் தெரியும். அப்போது இருந்த மணிப்பூரின் ராஜா ஒரு கோழை, நிர்வாகத் திறமை இல்லாதவர். ஆனால் பட்டத்து மகா ராஜாவின் மூன்றாவது தம்பியோ இதற்கு நேர் மாறானவர். மிகச் சிறந்த புத்திசாலியும் திறமைசாலியுமான அவர் அந்நாட்டுப் படைகளின் தளபதி கூட. இவ்விருவரைத் தவிர இன்



னும் ஆறு சகோதரர்கள். இவர்களில் மூன்று பேர் தளபதியாகவுள்ள இளவரசரை அரியணையில் அமர்த்திவிடத் துடியாக இருந்தார்கள். மற்ற மூவர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சி பீடத்தில் இருந்த மகாராஜாவை ஆதரித்தனர்.

கிரிம்வுட் தம்பதிகளின் நெருக்கமான நண்பர் படைத்தலைவரான இளவரசர். பழகுவதற்கு இனியவர். அரண்மனை விவகாரங்களைப் பற்றிக் கிரிம்வுட் தம்பதியர் கவலைப்படவில்லை. சேனாபதி இளவரசருடனும் அவரை ஆதரிக்கும் இளவரசர்களுடனும் தம்பதிகள் தமாஷாகப் பொழுது போக்கி மகிழ்ந்தார்கள். போலோ விளையாடுவார்கள். விருந்தும் வேடிக்கையுமாகக் கழிந்தன நாட்கள்.

கிரிம்வுட் இம்பாலுக்கு வந்து ஓராண்டு ஆகியது. அரண்மனைக் குடும்பப் பூசல்களில் அவர் அக்கறை காட்டாவிட்டாலும் அந்தச் சுழலில் இவர்கள் இழுக்கப்பட்டார்கள். ஒருநாள் நள்ளிரவுக்கு மேல் மணிப்பூரின் மகாராஜாவும் அவரை ஆதரிக்கும் இளவரசர்களும் (சகோதரர்கள்) ஆங்கிலேய அதிகாரியான கிரிம்வுட் வசிக்கும் இல்லத்துக்குத் திடீரென்று விஜயம் செய்தார்கள். அவர்கள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது; பேச முடியாமல் நாக் குழறியது.

மகாராஜா கூறினார்: ''என்னுடைய மற்றச் சகோதரர்கள் புரட்சி செய்து அரசைக் கைப்பற்றிக் கொண்டு அரண்மனையிலிருந்து என்னை வெளியேற்றி விட்டார்கள். பதவி இழந்தவனாகி விட்ட எனக்கு நீங்கள்தான் உதவ வேண்டும். நான் இங்கிருந்து தப்பிச் சென்றாக வேண்டும். இல்லாவிடில், அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள்.''

வியப்பும் திகைப்பும் அடைந்த கிரிம்வுட், "நீங்களோ மகாராஜா. உங்கள் உரிமையை, சிங்காதனத்தைக் காத்துக் கொள்ளப் போராட வேண்டாமா?" என்று கேட்டார்.

ஆனால் அந்தப் பொம்மை மகாராஜாவுக்கு அதற்கான வேகமோ, துடிப்போ, வீரமோ இல்லை. ஆகவே பதவி இறக்கப்பட்ட மகாராஜாவையும் அவரது ஆதரவாளர்களையும் ராணுவப் பாதுகாப்புடன் கல்கத்தாவுக்குப் பத்திரமாக அனுப்பி வைத்தார், கிரிம்வுட்.

கிரிம்வுட் தம் மனைவி எடித்திடம் "அரசாங்கத்திடமிருந்து வரும் உத்தரவை எதிர்பார்த்து நாம் காத்திருக்க வேண்டும்" என்றார். எதிர்பார்த்தபடியே, உத்தரவு வந்தது. கடித மூலமாக அல்ல; படைகளாக. நானூறு கூர்க்காப் பட்டாளத்துடன் பிரிட்டிஷாரின் படையணி இம்பாலுக்கு வந்து சேர்ந்தது. படைத் தளபதியான கர்னல் "மூத்த சகோதரர்தான் பட்டத்து மகாராஜாவாக வர வேணும். புரட்சிக்குத் தலைமை தாங்கும் படைத் தளபதியான இளவரசரைக் கைது செய்து நாடு கடத்த வேண்டும்" என்று ஆணையிட்டார். அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கிரிம்வுட்டினுடையது. இளவரசரோ அவரது நண்பர். ஆனால் கசப்பான காரியமானாலும் கடமையைச் செய்யக் கிளம்பினார், கிரிம்வுட். ஆங்கிலேயரின் ஆணைப்படி நடக்க மறுத்து விட்டார் புதிய மகாராஜாவான இளவரசர்.

"எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவர் நம் ஏற்பாட்டை ஏற்கவோ கேட்கவோ மறுத்துவிட்டார்." என்றார் கிரிம்வுட் கர்னலிடம்.

"பேச்சு வார்த்தை பலனளிக்காவிடில் பலாத்காரத்தைப் பயன்படுத்த வேண்டியதுதான்" என்றார் கர்னல்.

மறுநாள் காலை கிரிம்வுட்டும் எடித்தும் தங்கள் இல்லத்திலிருந்து கூர்க்காப் படையணியைப் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் அரண்மனையை நோக்கி நடத்திச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு குன்றில் கோட்டைச் சுவர்களால் சூழப்பட்டிருந்தது அரண்மனை. பிரிட்டிஷார் நினைத்தது போல் அதற்குள் நுழைவது அவ்வளவு சுலபமாக இல்லை. கோட்டை மீதிருந்த பீரங்கிகள் நெருப்பு மழை பொழிந்தன. பிரிட்டிஷ் பட்டாளம் பின்வாங்கி விட்டது.

கர்னல் மறுபடியும் இளவரசருடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த விரும்பினார். இளவரசரின் நண்பரான கிரிம்வுட் அரண்மனைக்குச் சென்று பேசுவதற்காக இரண்டு ராணுவ அதிகாரிகளுடன் கிளம்பினார். திடீரென்று எடித்தின் உள்ளத்தில் இனம் தெரியாத கலவரம் குமைந்தது. கணவரான கிரிம்வுட்டைக் கட்டிக் கொண்டு, "நானும் உங்களுடன் வருகிறேன். என்னையும் அழைத்துக் கொண்டு செல்லுங்கள்" என்று கண் கலங்கினாள்.

தன்னை இறுக்கியிருந்த அவளது கரங்களை மெதுவாக விலக்கிக்கொண்டே, "நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய், எடித். இங்கேயே ஓய்வெடுத்துக்கொள். நான் வந்து விடுகிறேன். கவலைப்படாதே" என்றார்.

அவர் திரும்பி வரவில்லை. கோட்டையிலிருந்து அதிர்ந்த பீரங்கிகள் அவரது பேச்சு வார்த்தை பலனளிக்கவில்லையென்பதை உணர்த்தின. கவலையையும் வேதனையையும் மறந்து எண்ணத்தை வேறு திசையில் திருப்புவதற்கு ராணுவ டாக்டரின் அழைப்பு அனுகூலமாக இருந்தது. காயமுற்ற வீரர்களுக்குச் சிகிச்சை செய்யும் தமக்கு உதவியாக இருக்குமாறு அழைத்தார் அவர்.


பூமிக்குக் கீழுள்ள கிடங்கிலே பத்திரத்துக்காகப் பதுங்கி யிருந்தார்கள். மேலே யுள்ள வீட்டைப் பீரங்கி வெடிகள் உலுக்கிக் கொண்டிருந்தன. நாள் முழுதும் எடித் டாக்டருக்கு உதவியாக உழைத்தாள். இரவு சூழ்ந்த போது ஒரு ராணுவ அதிகாரி அபாய அறிவிப்பைத் தெரிவித்தார். "காயமுற்ற வீரர்களுடன் நீங்கள் இங்கிருந்து வெளியேறிவிடுங்கள். நம்மிடம் வெடி மருந்துகளும் ஆயுதங்களும் வெகு குறைவாகவே உள்ளன. இங்கிருந்து உடனே சில்சாருக்கு நாம் பின்வாங்கியாக வேண்டும்."

எடித்துக்கு ஒரு விநாடி எதுவுமே ஓடவில்லை. சிலையானாள். திக்பிரமை பிடித்தவளாக, "என் கணவர் எங்கே, என்னவானார்? அவர் இல்லாமல் நான் எப்படி இங்கிருந்து கிளம்ப முடியும்?" என்று குமைந்தாள் அந்தக் குமரி. ஆனால் அவள் ஆதங்கத்துக்கு ஆதரவாகப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில் அங்கு யாரும் இல்லை. காயமடைந்த வீரர்களின் பாதுகாப்புத்தான் முதன்மையாக இருந்தது. புண்பட்டவர்களைக் கொண்டு வந்து புல்வெளியிலே கிடத்தினார்கள். அவர்களைத் தூக்கிச் செல்வதற்கு உதவியாளர்கள் வரும்வரை பாதுகாப்பும் சிகிச்சையும் அளிக்கப்பட்டன. துப்பாக்கிக் குண்டுகளும் பீரங்கிக் குமுறலும் தொடர்ந்து கொண்டே இருந்தன.

உங்களால் முடியுமா?

சம பக்கமுடைய ஒரு சதுரத்தை நான்கு சம பாகங்களாக எத்தனை விதங்களில் பிரிக்கலாம்? இங்கு சில வழிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இதைத் தவிர இன்னும் சில வழிகளும் இருக்கலாம். புதிய முறைகளைக் கண்டுபிடிக்க நீங்கள் முயன்று பார்க்கலாமே.

எஸ். சோமசுந்தரம்



பிரிட்டிஷ் படைகளுக்கும் மணிப்பூர் இளவரசரின் படைகளுக்கும் மோதல் நிற்கவில்லை. காயம் அடைந்த வீரர்களை அப்புறப்படுத்தியான பிறகு மற்றுமுன்னோர் பின் வாங்கி வெளியேறுவதில் கவனம் செலுத்தினர்.

எடித் தன் வீட்டுக்குப் போனாள், தன் உடைமைகளையும் உடைகளையும் எடுத்துக்கொண்டு அவர்களுடன் கிளம்புவதற்கு. ஆனால் வீடு பீரங்கித் தாக்குதலில் தரை மட்டமாகியிருந்தது. இடிபாடுகளைத் தவிர ஏதுமே காணோம். அணிந்திருந்த அழுக்கு அடைந்த ஒரே உடையோடு வீட்டுக்குள் அணிந்து நடமாடும் மெல்லிய காலணியோடு கிளம்ப வேண்டியதுதான். வேறு வழியில்லை.

உல்லாசப் பறவையாகக் களிப்பும் மகிழ்ச்சியுமாகக் கணவனோடு இம்பாலுக்கு வந்தவள் இப்போது தன்னந்தனியாளாகக் காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் துப்பாக்கித் தோட்டாக்கள் விரட்டப் புதர்களின் முட்கள் உடையையும் உடலையும் கிழிக்க ஓடிக்கொண்டிருந்தாள். இரவு வேளையில் இடுப்பளவு நீரில் ஆற்றைக் கடக்க வேண்டி இருந்தது. முதலிலேயே கவலையினாலும், நர்ஸ் பணியாலும் களைப் படைந்திருந்தாள் எடித். அதிகாரியின் மனைவி, காயம் அடைந்த வீரர்களுக்கு வைத்திய உதவி அளிக்கும்போது உதவியாக இருந்தவள், எல்லாவற்றுக்கும் மேலாக இள வயதுடைய பெண் ஆகவே ராணுவ அதிகாரிகளும் கூர்க்கா வீரர்களும் அவளுக்காக நின்று நின்று காத்திருந்து அழைத்துப் போயினர். எடித்தின் காலணி அந்த ஓட்டத்தில் அறுந்து கழன்று விழுந்து விட்டது. காலுறை (ஸ்டாக்கிங்ஸ்) கந்தலாகிப் போயிற்று. ஆனாலும் காலணி இல்லாத காலுடனே நடந்தாள் எடித். தன்னால் அவர்கள் வேகம் தடைப் படக் கூடாது என்ற உறுதியோடு, தன் களைப்பையும் கஷ்டத்தையும் சகித்துக் கொண்டு முன்னேறினாள். எதிரிகளிடமிருந்து தப்பிப் பாதுகாப்பைத் தேடி ஓடும் அவர்கள் அபலையான எடித்தைத் தடங்கலாக நினைக்கவில்லை; நினைக்கவும் முடியாது. ஏனென்றால் அந்தப் பகுதியின் பாதைகளெல்லாம் அறிந்தவள் அவள் ஒருத்திதான். அவர்களிலே வேறு யாருக்கும் சில்சாருக்குப் போகும் வழி தெரியாது. பாதுகாப்பும் உதவியும் கிடைக்கக் கூடிய ஓர் இடத்தை அவர்கள் அடைய வேண்டுமானால் அங்கு அவர்களை அழைத்துப் போகக் கூடியவள் எடித்தைத் தவிர வேறு யாருமில்லை!

நள்ளிரவு இரண்டு மணிக்குக் கிளம்பினார்கள். மறுநாள் நண்பகலுக்கு முன்புதான் களைப்பாற ஓர் இடத்தில் தாமதித்தார்கள். சுவர் போல முன்னால் மலைகள். அதன் உச்சியிலே பஞ்சுப் பொதியாக மேகங்கள் படிந்திருந்தன. அந்த மலையுச்சிக்கு மறு பக்கத்தில்தான் அவர்கள் அடைய வேண்டிய சில்சார் முகாம் இருக்கிறது. அந்த நெடிதுயர்ந்த மலை ஏறி மறு பக்கம் போயாக வேண்டும். 'ஆண்களுக்குச் சுமையாக நான் இருக்க மாட்டேன். அவர்களுக்குச் சமமான தைரியத்துடன் வழிகாட்டிச் செல்லுவேன்' என்று தன்னை உறுதிப்படுத்திக் கொண்டாள் எடித்.

பசிக்கு உணவில்லை. கையிருப்பெல்லாம் காலியாகி விட்டது. கிராமங்களை அணுகினால் உள்ளூர்க் குடியானவர்கள் இவர்களை நோக்கித் தோட்டாக்களை வீசினார்கள் அல்லது பயந்து கொண்டு ஓடினார்கள். அப்படி ஓடியவர்கள் இவர்களுக்கு ஒரு மணி அரிசியைக்கூட விட்டுச் செல்லவில்லை. இருட்டும் நேரத்தில் பசியும், களைப்பும் தளர்ச்சியுமான நிலையில் மலைமீது ஏறலானார்கள். அது சௌகரியமான பாதையல்ல. பல இடங்கள் செங்குத்தாக

இருந்தது. சில வேளைகளில் கைகளாலும் முழங்கால்களாலும் மார்பினாலும் ஊர்ந்து போக வேண்டியிருந்தது. எடித் பல தடவைகளில் நினைவிழக்கும் நிலையை அடைந்தாள். மூச்சுக்கூட விட முடியாத அவஸ்தைப் பட்டாள். ஆனாலும் அவர்களைச் சில்சாருக்கு அழைத்துப் போய் விடுவது என்ற ஒரே மூர்க்க வெறியுடன் முன்னேறிக் கொண்டிருந்தாள். உடலெங்கும் காயங்கள். செக்கச் சிவந்த உடலில் ரத்தம் கசிந்தும் கன்னியும் போயிற்று. ஆனாலும் எடித் முன்னேறிச் செல்வதை நிறுத்தவில்லை.


காலையில் இவர்கள் வரும் பாதையில் வழிமறித்து நின்றார்கள் கதேசிகள். ஆனால் கூர்க்கா வீரர்கள் அபாரமான சாகசத்துடன் அவர்கள் மீது பாய்ந்து தாக்க வந்தவர்களையெல்லாம் விரட்டியடித்தார்கள். ஓர் இடத்தில் எடித் செங்குத்தான பாதையில் ஏறும்போது அவளுடைய நீண்ட கவுன் தடுக்கிவிடவே தலை குப்புறக் கீழே சரிந்தாள். கிடுகிடு பாதாளம், பாறைகள். அந்த வேளையிலும் அதிர்ஷ்டம் அவள் பக்கம் இருந்தது. உடல் உருத் தெரியாமல் சிதறிப் போயிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சி. ஆனால் எந்த ஆடை அவளைத் தடுமாற வைத்துத் தள்ளி விட்டதோ, அதே ஆடை அவளைக் காப்பாற்றவும் செய்தது. மலை இடுக்கில் வளர்ந்திருந்த ஒரு மரக் கிளையில் மாட்டிக்கொண்டு ஊசலாடியபடி தொங்கினாள், இவ்வளவு ஆண்மகனுக்கும் வழிகாட்டியாக வந்து கொண்டிருந்த எடித், ஸ்ரீமதி கிரிம்வுட். ஒரு கூர்க்கா சாகஸம்மிக்க துணிச்சலான காரியத்தைச் செய்திருக்காவிடில் அவள் பிழைத்திருக்க முடியாது. அவள் மட்டுமா? அவளை நம்பி சில்சாருக்குப் போய்விடலாம் என்று பின்தொடர்ந்து வரும் அத்தனை பேருமே விரோதிகளிடம் வீழ்ந்து மாண்டிருப்பார்கள்.

அந்தக் கூர்க்கா தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு கால்களை அகலப் பரப்பி ஒரு பாறையிலே உதைத்துக் கொண்டு தன் உடலை மட்டும் இடுப்பு வரை மலைப் பாதையின் விளிம்பு வழியே கீழே தாழ்த்திக் குனிந்தான். அவனது உறுதி மிக்க இரு கைகளும் ஊசலாடியபடியே உயர்த்தி யிருக்கும் திரமிக்க எடித்தின் கைகளை மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டிருந்தன. யாருமே சிறிது நேரம் மூச்சே விடவில்லை. விரல்கள் வெறு வெளியிலே புழுவாக வளைந்தன, நெளிந்தன, பரபரத்தன. இதோ, இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்,... எட்டவில்லை! எவ்வினான் கூர்க்கா. இருவர் அவன் கால்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு அவன் உடலைக் இன்னும் கொஞ்சம் கீழே இறக்கினர். அதோ, அதோ! விரலோடு விரல்....! எடித்தின் பஞ்சுக் கரங்களைக் கூர்க்காவின் முரட்டுக் கரம் வளைத்துப் பிடித்துக் கொண்டது உறுதியாக. மூச்சுக் கட்டினான். முக்கி முனகினான். மெள்ள மெள்ள அந்தப் பூ உடலை மேலே தூக்கியே விட்டான்! பயங்கரமான மரணத்தின் பிடியிலிருந்து அவளைப் பறித்துக் கொண்டு வந்து சேர்ந்து விட்டான் கூர்க்கா வீரன்!

ஒரு பெரிய இழப்பிலிருந்து, இறப்பிலிருந்து மீண்ட அந்த அதிர்ச்சியும் ஆனந்தமும் அடங்குவதற்கு முன் மேலிருந்து சிலர் கூவினார்கள். ''வெகு தூரத்தில் ஒரு கூட்டம் இந்தப் பக்கமாக வருகிறது'' என்று. கண்ணுக்குப் புலப்படாத புதியவர்கள் விரோதிகளா நண்பர்களா என்று தெரியாத நிலையில் எல்லோரும் படபடக்கும் நெஞ்சத்துடன் ஆங்காங்கே பதுங்கியபடி காத்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஸ்ரீமதி கிரிம்வுட் சும்மா இருக்கவில்லை. உயர்ந்த இடத்தில் ஒளிந்து நின்று உற்று நோக்கினாள். சில நிமிடங்களில் ''பியூகிளை ஊதுங்கள்'' என்று உத்தரவிட்டாள். ஆங்கிலப் படையணியில் இருந்த கொம்பு ஊதுபவன் பலமிழந்த நிலையில் ஆனால் சுத்தமாகத் தன் பியூகிளில் போர்ப் படைச் சங்கேத ஒலியை எழுப்பினான். இவன் ஊதிய குழலுக்குப் பதில் குழல் ஒலி கிடைத்தது. எடித் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள். வருபவர்கள் யார் என்பதைப் புரிந்து கொண்டு விட்டாள் அவள். ''காப்டன் கல்லே தமது கூர்க்காத் துப்பாக்கிப் படையுடன் சில்சாரிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்'' என்று ஸ்ரீமதி கிரிம்வுட் கூறிய வார்த்தைகள் சில்சாரை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்கு அந்த வேளையில் எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்? ''நாம் காப்பாற்றப்பட்டோம்'' என்ற நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது அவ்வீரர்களிடமிருந்து.

இங்கிலாந்து திரும்பிய எடித்தை விக்டோரியா மகாராணி தானே வந்து வரவேற்றுப் பாராட்டினாள். அவள் ஆயுள்வரை கஷ்டமின்றி வாழ உதவிப் பணம் (பென்ஷன்) தரும்படி ஆணையிட்டாள் அரசாங்கத்துக்கு. இந்தப் பாராட்டுக்களையும் பண உதவியையும் அவள் விரும்பவேயில்லை. அவளுக்கு வேண்டியதெல்லாம் அவள் விரும்பியதெல்லாம் அவள் கணவனைப் பற்றிய செய்திதான். அது கிடைக்கவேயில்லை!

● 'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே; சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


ஜெம்ஸ் கேளிக்கை பாரீர்!
எத்தனை முக்கோணங்கள்
என்பதைக் கண்டு பிடிக்க முடியுமா?
Cadbury's
MILK CHOCOLATE
GEMS
காட்பரிஸ்
ஜெம்ஸ் – குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்!
வண்ண வண்ண
சாக்கலேட்
ஜெம்ஸ்
C-5 T

REGISTERED NO. M. 9040

AN ESCAPE FROM DULL ROUTINE

There's excitement, adventure and suspense in every issue of INDRAJAL COMICS — the fortnightly that narrates the daring exploits of the invincible Phantom, Flash Gordon, Mandrake and others.

Published in Three languages — English, Hindi and Bengali. Indrajal Comics — a favourite with every child.

Indrajal Comics

Price: ONE RUPEE

A Times of India Publication

Dr. Dadabhoy Naoroji Road
BOMBAY-400001



